மலர்: 52 இதழ்:11 நவம்பர் 2010 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்துசமய அறநிலையத்துறை வெளியீடு




அருள்மிகு அருணாசலேசுவரர் அருள்மிகு உண்ணாமுலையம்மை

**ஞானத் திரளாய் நின்ற பெருமான் நல்ல அடியார் மேல்**
**ஊனத் திரளை நீக்கும் அதுவும் உண்மைப் பொருள்போலும்**


– திருஞான சம்பந்தர்



# வடலூர் சத்திய ஞானசபை முன் மண்டபத் திறப்புவிழா



வடலூர் திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் 02.10.2010 அன்று திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.78 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பெற்ற ஞானசபை முன்மண்டப திறப்பு விழா, ஞானசபை வளாகத்தைச் சுற்றி ரூ.68 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுலாத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சிப் பணிகள் நிறைவு விழா, திருவருட்பா மலிவுப் பதிப்பு நூல் வெளியீட்டு விழா ஆகியவை மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் திரு.க.அன்பழகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றன. விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தவத்திரு ஊரன் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை விழுப்புரம் மண்டல இணை ஆணையர் திரு.சி.தங்கராசு, அறங்காவலர்குழுத் தலைவர் திரு.மு.ராமலிங்கம் உள்ளிட்ட அறங்காவலர்கள், செயல் அலுவலர் திரு.க.நாகராஜன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.





சென்னை திருவேற்காடு அருள்மிகு தேவிகருமாரி அம்மன் திருக்கோயிலில் ரூ.2கோடி மதிப்பீட்டில் தினத்தந்தி அதிபர்திரு.பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள் உபயமாகக் கட்டித் தந்த தெற்கு பிரகார மண்டபத்தினை 06.10.2010 அன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்கள். விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் கே.பி.பி.சாமி, தினத்தந்தி அதிபர் திரு.பா.சிவந்தி ஆதித்தன், திரு. பாலசுப்ரமணிய ஆதித்தன், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு.ரா.சிவகுமார், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.ப.ரா.சம்பத் இ.ஆ.ப, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.ஏ.பி.சிவாஜி, பா. ரங்கநாதன், அறங்காவலர் குழுத்தலைவர் திரு.பா.ஜெயராமன் உள்ளிட்ட அறங்காவலர்கள், இணைஆணையர்/ செயல் அலுவலர் முனைவர்.ந.தனபால் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# திருக்கோயில்

## சிறப்பாசிரியர் பக்கம்



**த**மிழகத்தில், குறிப்பாக பின்தங்கிய கிராமங்களில் ஒரு வேளைகூட பூசை செய்ய இயலாத நிலையில் உள்ள திருக் கோயில்களில், இந்து சமயஅறநிலையத்துறை ஏற்படுத்தியுள்ள ஒருகால பூசை நிதியுதவி திட்டத்தின் கீழ் தற்போது 11690 திருக்கோயில்களில் ஒருகால பூசை நடந்து வருகிறது.

இத்திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பூசாரிகள் 10ஆயிரம் பேருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தைக் கடந்த 18.10.2010 அன்று தலைமைச் செயலகத்தில் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்** தொடங்கி வைத்து, திட்டத்தின் தொடக்கமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 200 அர்ச்சகர்கள், பூசாரிகளுக்கு மிதி வண்டிகளை வழங்கினார்கள்.

இவ்விழாவினைத் தொடர்ந்து தமிழகம் முழுவதிலும் ஒருகால பூசை நடைபெறும் திருக்கோயில்களில் அர்ச்சகர்கள், பூசாரிகளுக்கு இலவச மிதி வண்டிகள் ஆங்காங்கே வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நலத்திட்ட தொடக்க விழா குறித்த செய்தித்தொகுப்பு வாசகர்கள் பார்வைக்குத் தரப்பெற்றுள்ளது.

தமிழர்களின் தொன்மையான திருவிழா, திருக்கார்த்திகை தீபத் திருவிழாவாகும். **"... கார்த்திகை நாள் தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும் விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்"** என்று திருஞான சம்பந்தர், கார்த்திகை மாதத்தில் ஆலயங்கள், வீடுகள் ஆகிய அனைத்திலும் நூற்றுக் கணக்கான விளக்குகள் ஏற்றி வழிபாட்டார்கள் என்பதை அறிகிறோம்.

ஒரே சமயத்தில் திருக்கோயில்களிலும், இல்லங்களிலும் கொண்டாடப்படும் விழாவாகவும், பண்டிகையாகவும் இருப்பது கார்த்திகை தீபம் மட்டுமே. கார்த்திகை தீப விழா சிவாலயங்கள், பெருமாள் கோயில்கள் என அனைத்து ஆலயங்களிலும் கொண்டாடப்படுகிறது. கார்த்திகை கிருத்திகையன்று மிகச் சிறப்பாக நடைபெறும் திருஅண்ணாமலையார் தீபத் திருவிழாவினைத் தரிசிக்க வாருங்கள் என பக்தர்களை அன்போடு அழைக்கிறோம்.

இவ்விதழில் பேராசிரியர் வை. இரத்தின சபாபதி, ஸ்வாமி, டாக்டர் பருத்தியூர் கே. சந்தானராமன், சித்தாந்த இரத்தினம் செ.வே. சதாநந்தன், சிவ நெறிச்செம்மல் பூசை.ச. அருண வசந்தன் முதலான அறிஞர் பெருமக்களின் கருத்தாழமிக்க கட்டுரைகள் வெளியாகியுள்ளன. படித்து இன்புறுங்கள்.

நாம ரூபம் அற்ற பரம்பொருளைச் சோதியாய், சுடராய், சூழொளி விளக்காய் சுயம்பிரகாச பேரொளி வடிவாய்காணும் கார்த்திகை தீபத் திருநாளில் பக்தர்கள் வாழ்வு ஒளிமயமாய் விளங்க திருவண்ணாமலையார் அருள் பாலிப்பாராக!

ப.ரா.சம்பத்

**(ப.ரா.சம்பத், இ.ஆ.ப.)**
**ஆணையர்**

திருக்கோயில்
திங்கள் இதழ்
இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு

நிறுவிய ஆண்டு: 1958
திருவள்ளுவர் ஆண்டு: 2041
ஐப்பசி - கார்த்திகை
நவம்பர் 2010
மலர்:52. இதழ்:11

சிறப்பாசிரியர் (ம)
வெளியிடுவோர்
திரு. ப.ரா. சம்பத், இ.ஆ.ப.,
ஆணையர்,
இந்து சமய அறநிலையத் துறை,
நுங்கம்பாக்கம், சென்னை-600 034.

ஆசிரியர்
தென்னம்பட்டு ஏகாம்பரம், எம்.ஏ.,

ஆணையர் அலுவலகம்
இந்து சமய அறநிலையத் துறை
119, உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை-600 034.
தொலைபேசி எண்:
28334811/12/13
மின்அஞ்சல்
tn.endowments@gmail.com

அச்சிடுவோர்
சென்னை மைக்ரோ பிரிண்ட்
(பி) லிமிடெட்,
130, (ப.எண் 34) நெல்சன்
மாணிக்கம் சாலை, அமைந்தகரை,
சென்னை - 600 029.
தொலைபேசி எண்: 2374 0099

சந்தா விபரம்
தனி இதழின்விலை ரூ. 10/-
ஈராண்டு சந்தா ரூ. 120/-
ஐந்தாண்டு சந்தா ரூ. 500/-
பத்து ஆண்டு சந்தா ரூ. 1000/-
ஆயுட்காலச்சந்தா ரூ. 1500/-
(ஆயுட்காலம் என்பது
அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

# இதழின் உள்ளே

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்த திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பூசாரிகள் 10ஆயிரம் பேருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் - செய்தித் தொகுப்பு** 3

கவியரசர் கண்ணதாசன்
**கிராம தேவதைகள்** 5

சித்தாந்த சரபம்
பேராசிரியர் முனைவர் வை.இரத்தின சபாபதி
**திருமுறைகள் காட்டும் வாழ்வியல்** 8

ஸ்வாமி
**செத்ததும் சிறியதும்** 11

சிவமஞ்சரி செம்மல்
பூசை.ச. அருண வசந்தன்
**ஆரழலாகி நின்ற அண்ணாமலையாரும் சொக்கப்பனைத் தீ வழிபாடும்** 14

சித்தாந்த இரத்தினம் செ.வே. சதாநந்தன்
**கந்த சஷ்டியின் மகிமை** 16

பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்
**வேல் கொடுத்தது சக்தியா? சிவனா?** 18

திருவரங்கம் அநுராதா சேஷாத்ரி
**ஆழ்வார்கள் அமிழ்தம்** 20

தருமையாதீனப் புலவர்
தா. குருசாமி தேசிகர்
**செம்பியன் மாதேவி** 24

இதய நிபுணர் டாக்டர் வி. சொக்கலிங்கம்
**மாரடைப்பைத் தடுக்க தியானம்** 27

பொன். தெ. தர்மராஜன்
**அய்யா வைகுண்டர்** 28

டாக்டர் என். ஸ்ரீதரன்
**தத்துவக் கதை - பாசமே பரமானந்தம்** 32

இரா. இரகுநாதன்
**சிங்கம் வாழ் குன்று** 34

தென்னம்பட்டு ஏகாம்பரம்
**ஆகார நியமம்** 37




# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பூசாரிகள் 10 ஆயிரம் பேருக்கு இலவச மிதி வண்டிகள் வழங்கும் திட்டம்

**செய்தித் தொகுப்பு**

தமிழகத்தில் ஒரு கால பூஜை திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறும் திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பூசாரிகள் 10 ஆயிரம் பேருக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்தை, கடந்த 18.10.2010 அன்று தலைமைச் செயலகத்தில் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்** தொடங்கி வைத்து, திட்டத்தின் தொடக்கமாக, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அர்ச்சகர்கள், பூசாரிகள் 200 பேருக்கு இலவச மிதிவண்டிகளை வழங்கினார்கள்.

தமிழகத்தில் தினமும் ஒரு வேளை கூட பூசை செய்ய இயலாத நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு தினமும் ஒரு கால பூசை நடத்துவதற்கு நிதி உதவி அளிப்பதை நோக்கமாகக் கொண்டு, இந்து சமய அறநிலையத் துறையின் மூலம் ஒரு கால பூசை திட்டம் ஏற்படுத்தப்பட்டது. திருக்கோயில்களில் பூசைகள் ஒழுங்காக நடைபெறுவதில் பொதுமக்கள் பங்கேற்பதை ஊக்குவிக்கும் பொருட்டு ஒரு குறிப்பிட்ட திருக்கோயிலுக்கு பொதுமக்கள் ரூ.2,500/– நன்கொடை வழங்கினால் இந்து சமய அறநிலையத் துறையின் பங்களிப்பாக இதற்கென ஏற்படுத்தப்பட்ட மைய நிதியிலிருந்து ரூ.22,500/– வழங்கப்படுகிறது. இவ்வாறு பெறப்படும் மொத்தத் தொகை ரூ.25,000/– அக்குறிப்பிட்ட திருக்கோயில் பெயரில் நிரந்தர முதலீடு செய்து அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து அத்திருக்கோயிலில் தினமும் ஒரு கால பூசை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 11,690 திருக்கோயில்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளன.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் திருக்கோயில்கள் பெரும்பாலும் பின் தங்கிய கிராமங்களில் உள்ளன. இத்திருக்கோயில்களுக்கு எளிதில் சென்று

பூசை செய்து வர ஏதுவாக இத்திருக் கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பூசாரிகளுக்கு இலவசமாக மிதிவண்டி வழங்கும் திட்டம் ஏற்படுத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் 2009-2010 ஆண்டிற்கான இத்துறை மானியக் கோரிக்கையின்போது சட்டப் பேரவையில் இத்திட்டத்தை அறிவித்தார்கள்.



இத்திட்டத்தின் தொடக்க விழா 18.10.2010 திங்கட் கிழமை அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. **மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்** இவ்விழாவில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் வேலூர் ஆகிய மாவட்டங் களைச் சேர்ந்த 200 அர்ச்சகர்கள், பூசாரிகளுக்கு மிதிவண்டிகளைத் தம் திருக்கரங்களால் வழங்கி இத்திட்டத் தினைத் தொடங்கி வைத்தார்கள்.

இத்திட்டத்தின்கீழ் அர்ச்சகர்கள், பூசாரிகளுக்கு வழங்குவதற்காக 10,000 மிதிவண்டிகள் ரூ.2.78 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரியகருப்பன் முன்னிலை வகித்தார். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் திரு.துரைமுருகன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பொங்கலூர் நா.பழனிச்சாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலர் திரு.ரா.சிவகுமார், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு. ப.ரா.சம்பத், இ.ஆ.ப., வடபழனி ஆண்டவர் திருக்கோயில் அறங்காவலர்க் குழுத் தலைவர் டாக்டர் சீர்காழி கோ.சிவசிதம்பரம் ஆகியோரும், அரசு உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவைத் தொடர்ந்து, தமிழகம் முழுவதிலும் ஒரு கால பூஜை நடைபெறும் திருக்கோயில்களின் அர்ச்சகர்கள், பூசாரிகளுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் பணிகள் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன.




**இலவச மிதிவண்டிகளுடன் பூசாரிகள் (ம) அர்ச்சகர்கள்**



# கிராம தேவதைகள்

கவியரசர் கண்ணதாசன்



**பா**ண்டிய மண்டலத்தில் கிராம தேவதைகளுக்குத் திருவிழா நடைபெறும் போது, 'புரவி எடுத்தல்' என்றொரு விழா நடைபெறும்.

மண்ணாலே குதிரை செய்து கோவிலுக்கு அருகில் நிறுத்திவிடும் பழக்கமே அது.

அவரவர்களுடைய சக்திக்குத் தகுந்தபடி, குதிரை பெரியதாகவோ சிறியதாகவோ இருக்கும்.

ஒரு காலத்தில் குதிரை வீரர்களைக் கௌரவிப்பதற்காக வந்த இப்பழக்கம், நாளடைவில் எல்லாச் சிறு தேவதைகளுக்கும் எடுக்கின்ற பழக்கமாகிவிட்டது. முத்தன், முனியன், காட்டேரி என்கிற சிறு தேவதை

பெயர்களெல்லாம் வீரனாக வாழ்ந்திருந்த யாரோ ஒருவரைக் குறிக்கும் பெயர்களே!

பாண்டிய நாட்டிலுள்ள ஐயனார் கோவில்களில் இந்தப் புரவி எடுக்கும் பழக்கம் அதிகம்.

பாண்டிய நாட்டில் ஒரு கிராமத்திலிருந்து மறு கிராமத்திற்குப் போகிறவன், வழியில் இத்தகைய மண்புரவிகளை ஏராளமாகச் சந்திப்பான்.

இது ஒரு வகையான வீர வணக்கம்.

எங்கள் ஊரிலே 'மலையரசி அம்மன்' என்ற பெயரிலும், வேறு பெயர்களிலும் அம்மன் கோயில்கள் உண்டு.

இந்த அம்மன்களெல்லாம், ஒரு காலத்தில் வாழ்ந்தவர்கள் என்றும் சகோதரிகள் என்றும் கூறுகிறார்கள்.

அவற்றில் 'மலையரசி அம்மன்' மீது எனக்கு ஈடுபாடுண்டு.

அந்தக் கோவிலில் போய்ச் சத்தியம் செய்தால், யாருமே அதை மீற மாட்டார்கள்.

யாரிடமாவது கடன் கொடுத்து ஏமாந்தவர்கள், கோர்ட்டுக்குப் போக வழி இல்லாவிட்டால், அந்தக் கடன் பத்திரத்துக்கு ஒரு காப்பி எடுத்து மலையரசியின் கோவிலில் வைத்து விடுவார்கள். கடனை ஏமாற்றியவன் குடும்பம் அழிந்தே போய்விடும்.

நான் கண் முன்னாலேயே இதனைக் கண்டிருக்கிறேன்.

அங்கே மலையரசி நீதிபதியாகவே வாழ்கிறாள்.

எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மூதாட்டியினுடைய மாங்கல்யத்தை அடகு பிடித்திருந்தார் ஒருவர். பணத்தோடு போய்க் கேட்டபோது, "தாலி வட்டியோடு மூழ்கிவிட்டது" என்று கூறி அதைத் தர மறுத்துவிட்டார்.

"உன் குடும்பம் சந்ததி இல்லாமல் போய்விடும்" என்று திட்டிவிட்டார் அந்த மூதாட்டி.

என்ன ஆச்சரியம்!

அந்தக் குடும்பம் ஆண் வாரிசு இல்லாமல் அழிந்து போய்விட்டது.

நமது மூதாதையர் நம்பி உரைத்த எவையுமே பொய்யல்ல என்பதை நான் கண் முன்னாலேயே கண்டிருக்கிறேன்.

ஏழைப் பெண் ஒருத்திக்குத் திருமணம் பேசிக் கொண்டிருந்தார்கள். அவள் அழகாக இருந்ததால் பெரிய இடத்துச் சம்பந்தம் கிடைக்கும் போலிருந்தது. பொறாமைக்காரர்கள் சிலர் அந்தப் பெண்ணைப் பற்றி அவதூறு கூறித் திருமணத்தைத் தடுத்து விட்டார்கள்.

அந்தப் பெண், காலையில் குளித்துவிட்டு ஈரப்புடவையோடு, இருபத்தோரு நாள்கள் அம்மன் கோவிலை வலம் வந்தாள்.

அவதூறு கூறியவர்கள் குடும்பம் சின்னாபின்னமாகி விட்டது.

பெஞ்ச் கோர்ட் நீதிபதிகளைப் போன்ற கிராம தேவதைகள் தம்மை நம்பினோரைக் காக்கிறார்கள்; அவர்கள் எதிரிகளைக் கருவறுக்கிறார்கள்.

முத்தாளம்மன், முத்துமாரியம்மன் போன்ற அம்மன்கள் எல்லாம் சக்தி வாய்ந்தவை என்பதைக் குறிக்க ஏராளமான கதைகள் உள்ளன.

ஏதாவதொரு வகையில் அவற்றின் சக்தி வெளிப்பட்டிருக்கிறது.

சென்னை நகரில் ஆலையம்மன், எல்லையம்மன், படவேட்டம்மன் என்று பல அம்மன்கள் இருக்கின்றன.

படவேட்டம்மன் என்பது, 'படைவீட்டு அம்மன்' என்பதின் மரூஉ ஆகும்.

இன்றைய சென்னை நகரம் பல கிராமங்களின் தொகுப்பாகும்.

மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, அடையாறு, வண்ணாரப்பேட்டை என்று பல கிராமங்கள் அக்காலத்தில் விளங்கின.



இவை ஒன்றுக்கு ஒன்று தொடர்பில்லாத கிராமங்கள். இடையில் பெரும் காடுகள் இருந்திருக்கின்றன. இந்தக் கிராமங்களின் எல்லைகளில் சிறு தேவதைக் கோயில்கள் இருந்திருக்கின்றன!

1945–இல் நான் சென்னை நகருக்கு வந்து இருந்தபோது கோடம்பாக்கம் பகுதி பெரும் காடாக இருந்தது.அங்கே, மிகப் பெரிய தோட்டம், 'நவாப் தோட்டம்' என்பது.

சினிமாவுக்கு அவுட்டோர் சூட்டிங் போகிறவர்கள், கோடம்பாக் கத்துக்குத்தான் போவார்கள்.

ஆற்காடு நவாப் குதிரைகளைக் கட்டுகிற இடமாக அது இருந்ததால், 'கோடாபாக்' என்று அதற்குப் பெயர் வைத்தார்.

'கோடா' என்றால் உருது மொழியில் 'குதிரை' என்று அர்த்தம்.

ஆற்காடு நவாப்பை முன்னிட்டுத்தான், அந்த ரோடும் 'ஆற்காடு ரோடு' என்று பெயர் பெற்றது.

1945–இல் காடாக இருந்த கோடம்பாக்கத்தில், மூன்று சிறு தேவதைக் கோயில்கள் இருந்தன. அவை இன்றும் இருக்கின்றன.

வடபழனி ஆண்டவர் கோவிலும் அவற்றில் ஒன்று.

அந்தக் கோவிலில் ஒரு சாமியார் இருந்தார். முள்ளாலே செய்யப்பட்ட பாதரட்சையைத்தான் அவர் அணிவார். முட்படுக்கையில் தூங்குவார். அவர்தான் வடபழனி கோவிலுக்குப் பூஜை புனஸ்காரங்கள் செய்து கொண்டிருந்தார்.

முதலில் சிறு தேவதைக் கோவிலாக இருந்த அதுதான் பிற்பாடு முருகன் கோவிலாயிற்று.

இந்தச் சிறு தேவதைகளின் சக்திகளைப்பற்றிச் சென்னை நகரில் ஏராளமான கதைகள் உண்டு.

பாண்டிய நாட்டு அளவுக்குத் தொண்டை மண்டலத்திலும் இந்தச் சிறு தேவதைகள் ஆதிக்கம் புரிந்து வருகின்றன.

'அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்' என்ற பழமொழியை, இந்தச் சிறு தேவதைகள் தான் உறுதி செய்கின்றன.

எங்கள் ஊருக்குப் பக்கத்தில், பள்ளத்தூர் என்ற ஊரில் 'சோலை ஆண்டவர் கோயில்' என்றொரு கோவில் உண்டு.

அந்தக் கோவிலிலுள்ள தெய்வம் சக்தி வாய்ந்தது என்று ஊரார் நம்புகிறார்கள்.

திருட்டுப் போன தாலி திரும்பி வந்ததாகவும், வண்டிச் சக்கரத்தில் நசுக்கப்பட்ட குழந்தை உயிர் பெற்றதாகவும் பல கதைகளை அங்கே கூறுகின்றனர்.

மொத்தத்தில், இந்துக்களின் சிறு தேவதை வழிபாடு நல்ல நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்ததே தவிர, மூட நம்பிக்கையில் எழுந்தது அல்ல.

கீழ்க்குலத்து மக்களால் மட்டுமே மதித்து வணங்கப்பட்ட சிறு தேவதைகள், இப்போது எல்லோராலும் மதிக்கப்படுகின்றன.


அவை செய்யும் சாகஸங்களை அறிந்தவர்கள் அவற்றை 'பெஞ்ச் கோர்ட் நீதிபதிகள்' என்றழைப்பதில் என்ன தவறு? அந்தச் சிறு தேவதை ஆதர்ஸம் எனக்கும் உண்டு.

எனக்கு வழிகாட்டியவள் எங்கள் ஊர் மலையரசி அம்மன்தான் என்று நான் இன்னமும் நம்புகிறேன்.



# திருமுறைகள் காட்டும் வாழ்வியல்
# 5.சான்றோன்

சித்தாந்த சரபம், பேராசிரியர்,
முனைவர் வை.இரத்தினசபாபதி



**முன்னுரை:**

தமிழக மக்களின் வாழ்வியற் சிந்தனையில் 'அறம்' எனப்பெறும் வாழ்வியல் வரையறை யானது முதன்மை பெறுதல் வேண்டும். "சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும் அறத்து வழிப்படும் தோற்றம் போல" என்று இலக்கணம் காட்டினார் தொல்காப்பியர்.

சென்ற நூற்றாண்டின் மத்தியில் வாழ்ந்த ஆன்மீகச் சொற்பொழிவாளர்கள் பெரும்பாலும், 'ஆன்றோர்களும் சான்றோர்களும் கூடியிருக்கும் இந்த அவையை வணங்கி வரவேற்கிறேன்' என்று முன்மொழிவது வழக்கம்.

தமிழகம் முழுவதிலும் பல்லக்கிலேயே சுற்றித் தமிழையும் சமயத்தையும் பரப்பிய தவத்திரு ஞானியாரடிகள் தம்முடைய சொற்பொழிவுத் தொடக்கத்தில் 'மெய்யன்பர்களே' என்றுதான் அவையோரை விளித்து வரவேற்பார்கள்.

பிறகு மெல்ல மெல்ல மாற்றம் பெற்று அவையில் உள்ள மதிப்புறு மக்களையெல்லாம் தனித்தனியே விதப்புறு கிளவியாற் கூறிப் புகழ்ந்து வரவேற்கும் முறை தோற்றம் பெற்றது. இன்றைய நாளில் இது மிகப் பலவாக விரிந்து சொற்பொழிவு நேரத்தின் பெரும்பங்கை விழுங்கிவிடும் சூழ்நிலையை உருவாக்கி விட்டது.

இக்கட்டுரையில் எடுத்துக் கொண்ட செய்தி **'ஆன்றோரும் சான்றோரும்'** என அவையினரை விளிக்கும் முறையில் அமைந்த உட்கருத்தை வெளிப்படுத்துவதுதான். இது ஒருவகை அறஇயற் சிந்தனை.

**ஆன்றோரும் சான்றோரும்:**

ஆலுதல், சாலுதல் என்ற சொற்களின் அடிப்படையில் தோன்றி வளர்ச்சி பெற்ற சொற்களே ஆன்றோர் சான்றோர் என்பன.

ஆலுதல் என்ற சொல்லானது நிறைதல் என்ற பொருளைத் தரும். அது தழைத்து, வளர்ந்து, ஓங்கி, நிலைகொண்டு, இருத்தல் என்ற பொருளைத் தரும். 'ஆல்போல் தழைத்து' என்று வரும் உலகியல் வழக்கை நோக்கி உணரலாம்.

சாலுதல் என்ற சொல்லும் நிறைதல் என்ற பொருளைத் தரும்.

ஆலுதல், சாலுதல் என்ற இரண்டு சொற்களை அடிப்படையாகக் கொண்ட ஆன்றோர், சான்றோர் என்ற இரண்டு சொற்களை நம் முன்னோர்கள் பயன்படுத்தி வந்துள்ளார்கள் என்பதை நாம் எளிமை எனக் கருதிப் புறக்கணித்து விடுதல் கூடாது.

**ஓர் எடுத்துக்காட்டு:**

ஒற்றை ரூபாய் நோட்டுகள் நூறு இணைந்த கட்டு ஒன்று. நூறு ரூபாய் நோட்டு ஒன்று. இரண்டற்கும் அடிப்படையில் மதிப்பீட்டு அளவில் வேறுபாடு இல்லை. ஆனால், ஒற்றை ரூபாய் நோட்டுக் கட்டில் இல்லாத (ஓர் அம்சம்) ஓர் உறுதியானது, ஒற்றையான முழுமையான நூறு ரூபாய் நோட்டு ஒன்றில் இருப்பதாக உணர முடிகிறது. அதனால்தான் நூறு ஒற்றை ரூபாய் நோட்டுக்களை வங்கியில் கொடுத்துவிட்டு ஒரு முழு நோட்டாக மாற்றம் செய்து கொள்ளுகிறார்கள்.

ஒற்றை ரூபாய் நோட்டு நூறு இருந்தாலும் சில்லறை தானே! என்று கூறுகிறார்கள். மதிப்பீட்டில் சற்றும் குறைவுபடாத ஒற்றை நூறு ரூபாய் நோட்டினை முழு நோட்டு என்று கூறுகிறார்கள்.

அவ்வாறே ஆலுதலும் சாலுதலும் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஆன்றோரும் சான்றோரும்.

**நிறைவு இருவகை:**

செல்வத்தால் வளமும் வாழ்வும் நிறைவும்



பெற்ற ஒரு மனிதரின் (கனவானின்) மாளிகை. மாளிகையின் தோற்றமே உள்ளிருப் பவரின் செல்வ வளத்தைப் பெருக்கியும், வகுத்தும் கூட்டியும் உணர்த்தி, உணர்த்தி, உரைக்கும் பெருமையைப் பறை சாற்றுகிறது. உள்ளே புகுவதற்கே அச்சம்.

மாளிகையின் உள்செல்வதற்குப் பல வகையான தடைகள் தாண்டிச் சென்று மாளிகையின் பல நிலைகளைக் கடந்து உள்ளே போனால் ஒவ்வொரு நிலைகளிலும் பல்வேறு வகையான பொலிவுகள் நிறைந்த இருக்கைகள், மாளிகையின் பல்வேறு நிலைகளிலும் பலவகையான நிறங்களை உமிழும் ஒளிவிளக்குகள் பல. இவைகளை யெல்லாம் ஒழுங்குபடுத்திப் பராமரிப்பதற்காக அமைக்கப் பெற்றிருக்கும் பணியாட்களும் பற்பலராக அமைக்கப் பெற்றுள்ளனர்.

மாளிகைக்கு உரிமையுள்ளவர்கள் என்று கருதப் பெறுபவர் நால்வர். நால்வருக்கும் தனித்தனி அறைகள். ஒருவரை ஒருவர் பார்த்துப் பல நாள்கள் ஆகிவிட்டிருக்கும். உணவு அவரவர்கள் இருப்பிடத்திற்கே சென்றுவிடும். வெளியில் செல்வதும், வருவதும் அவரவர் மனம்போல். ஒருவர் செயலின் காரணம் மற்றவர்களுக்குத் தெரியாது.

புறநிலையில் உள்ள அத்துணை விரிவுகளும் ஒளிநிலை விளக்கங்களும் அகவுணர்வில் இல்லை. மாளிகை பெரிது; புற விளக்கங்கள் அதனினும் பெரியவை; கண்டாரை மயங்க வைக்கும் (அ) மருளவைக்கும் ஒளிப்பொழிவுகள், அப்பப்பா! மிக மிகப் பெரியவை. ஆனால், மாளிகையின் அகநிலையில் ஒருமையுணர்வு இல்லை; ஆன்மநேயம் அருகிவிட்டது. ஊட்டச்சத்து நிறைந்த உணவு அமையலாம். ஆனால், அன்பு அகத்து இல்லா உயிர் வாழ்க்கை எவ்வாறு உயர் வாழ்க்கையாக அமைய முடியும்! இவையெல்லாம் 'ஆலுதல்' என்ற ஒற்றை வார்த்தையின் அகலவுரைகள்.

'சாலுதல்' அவ்வாறன்று; அதுவும் நிறைவுதான். அகத்தே தோன்றிப் புறத்துவரை வந்து, உலகத்தவரையெல்லாம், சுருங்கச் சொன்னால், உலகத்து உயிர்களையெல்லாம் ஒருமை உணர்வுடன் அரவணைத்துக் கொள்ளும், ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையுடன் விளங்கும் பெரும் பேரொளியின் நிறைவு.

சென்ற நூற்றாண்டில் மேலை நாட்டறிஞர் கிறித்துவ அருள் தந்தை பிஷப் பட்லர் கூறிய நிறைவுக் கொள்கை (PERFCTIONISM)யை ஒத்தது என்று அறிஞர்கள் கருதினாலும், இன்னும் ஒரு படி மேலே சென்று, மனிதன் தன்னிறைவு பெறுவது மட்டும் போதாது; உலகத் துயிர்களையும் அருளொளியால் நிறைவு பெறச் செய்ய வேண்டும் என்ற வகையில் மலர்ந்த **அருளொளி நிறைவுக் கொள்கையே** தமிழகம் அமைத்த சான்றாண்மைக் கொள்கை.

**திருவள்ளுவர் காட்டும் இணைப்பு:**

மேலே எழுதப் பெற்றவைகளைப் படிக்கும் அன்பர்கள் ஆலுதலை வெறுத்து, ஆரவாரத்தன்மை உடையது அது என்று கருதி, ஆன்றோரையும் வெறுத்துவிடும் நிலைக்குத் தள்ளப் பெற்று விடுவர்.

ஆனால், திருவள்ளுவர் ஆலுதலை ஏற்கிறார். ஆன்று, அவிந்து, அடங்குதல் வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். சங்க இலக்கியமும் ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் என்று குறிப்பிடுகிறது.

ஆலுதல் நிலையில் விரிவும் விரைவும் வாழ்க்கையில் தோன்றினாலும், உள்ளே கிளர்ந்து எழும் ஆணவம் சிறுகச் சிறுக அவிந்து, அடங்கி விடும் ஆதலின் ஆலுதலும் தேவை என்று தமிழகச் சிந்தனை வளம் கருதியது.

**சாலுதலும், சான்றாண்மையும்:**

சாலுதல் என்ற நிறைவைத் திருவள்ளுவர் ஐந்து தூண்களின் மேல் எழுப்பப் பெறும் அகத்தெழும் நிறைவு மாளிகை என்று அமைத்துக்காட்டுகிறார்.

**"அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம் வாய்மையோடு**
**ஐந்து சால்பு ஊன்றிய தூண்"** என்பது திருக்குறள்.

அன்பு, தீய செயல்கள் செய்வதற்கு வெட்கம் கொள்ளுதல், உலகநடையை அறிந்து ஒழுகுதல், பிற

உயிர்களின் துன்பங்கண்டு வருந்துதல், உண்மையை வாழ்வியலின் முதற்படியாகக் கொள்ளுதல் ஆகிய ஐந்தையும் அடிப்படை தூண்களாக நிறுத்தி, அவைகளின் மேல் வாழ்வியல் மாளிகை அமைய வேண்டும்.

மேலே குறிப்பிடப் பெற்ற ஐந்தும் சமநிலையில் நிறுவப் பெற்று, அத்தகைய நிறுவல் மூலமாக ஒருவகை நிறைவு அமையுமானால் அத்தகைய நிறைவே 'சால்பு' என்னும் மாளிகை.

நால்வகைத் தூண்கள் தாம் ஒரு மாளிகைக்கு அடித்தளங்களாக அமையும். ஆனால், திருவள்ளுவர் வாய்மையை அனைத்துக்கும் அடித்தளம் ஆக்குகிறார்.

வாய்மையினால் சுத்திகரிக்கப் பெற்ற அன்பு; வாய்மையினால் சுத்திகரிக்கப் பெற்ற நாணம், வாய்மையினால் சுத்திகரிக்கப் பெற்ற ஒப்புரவு என்று பொருள் கொள்ள வேண்டும். அதனால்தான் 'ஒரு' என்ற உருபை வாய்மை யோடு ஐந்து என்று அமைத்துக் காட்டினார் என்று பொருள் கொள்ளுதல் வேண்டும்.

**சான்றாளர் இருவகையர்:**

தனி மனிதன் தன்னளவில் மேலே குறிப்பிடப் பெற்ற வகையில் – ஐந்து நிலை களிலும் நிறைவும் முழுமையும் பெற்றவனாக அமைதல் ஒருவகை. அது தனிமனிதன் தன்னளவில் சான்றாளனாய் நிற்றல்.

அவனே தன்னைப் போல் மற்றவர்களையும் சான்றாளர்களாக ஆக்குதல் இரண்டாவது வகை. இதனைத் தொல்காப்பியம் இரண்டு வகை எடுத்துக்காட்டுகளால் விளக்குகிறது.

மாடுகள் பல வகைகளாக இருந்தாலும் ஆண் மாடுகள், பெண்மாடுகள் என இருவகை உண்டு. ஆண்மாடுகளைக் காளை அல்லது பகடு என்றும் பெண்மாடுகளைப் பசு அல்லது ஆ என்றும் குறிப்பிடுவது வழக்கம்.

தனிமனிதன் தன்னிலையில் சான்றோன் என நின்றால் அவனை 'ஆ' அனைய சான்றோர் என்றும், அவனே பிறனையும் சான்றாளனாக ஆக்குவானேயானால் அவனைப் பகடு அனைய சான்றோன் என்றும் தொல்காப்பியம் வரையறை செய்கிறது.

**"பகட்டினானும் ஆவினானும்**
**துகள் தபு சிறப்பின் சான்றோர் பக்கமும்"**

என்பது தொல்காப்பியம்.

'ஆ' அனைய சான்றோர் என்றும், 'பகடு' அனைய சான்றோர் என்றும் சான்றோர் இருவகைப்படுவர் என்பது கருத்து.

இரு நிலைகளும் வெற்றி நிலைகளே. "ஆ" அனைய சான்றோர் அறஇயல் வாழ்வில் தன்னளவில் நிறைவும் முழுமையும் அமைந்த வெற்றியைப் பெற்றவர்களே.

பகடு அனைய சான்றோர் தன்னளவில் அறஇயல் வாழ்வில் நிறைவும் முழுமையும் அமைந்த வெற்றியைப் பெற்றதுடன் பிறரையும் அற இயல் வாழ்வில் நிறைவும் முழுமையும் அமைந்த வெற்றியைப் பெறுமாறு உழைத்தவர்கள் ஆகிறார்கள்.

பகடனைய சான்றோர்களே உயர் தனிச் சான்றாண்மையாளர்களாக விளங்குகின் றார்கள்.

சான்றாளர் இருவகை என நின்ற காரணத்தாலேயே ஒழுக்கமும் இரு வகையாகப் பிரிவு பெறுகிறது.

தனி மனிதன் தன்னளவில் அறத்தில் வழுவாது நின்று ஒழுகுதலும் ஒழுக்கமே. அவனே பிறரை அறநிலையில் வழுவாது நிற்குமாறு நிறுத்துவதும் ஒழுக்கமே.

ஒழுக்கம் என்பதற்கு இரண்டு பகுதிகள் உண்டு. ஒழுகு, ஒழுக்கு என்ற இரண்டுமே ஒழுக்கம் என்பதன் பகுதிகளே. ஒழுகுவதும், ஒழுக்கம்; பிறரை ஒழுக்குவதும் ஒழுக்கமே.

**"பிறன்மனை நோக்காத பேராண்மை**
**சான்றோர்க்கு**
**அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு"**

என்பது திருக்குறள்.

திருமுறைகள் காட்டும் வாழ்வியலில் பகடு அனைய சான்றோரே இறைவனுக்கு ஊர்தியாக அமைத்துள்ளனர் என்ற இணைப்புக் கருத்தை உடன் கொள்ளல் வேண்டும்.

**முடிவுரை:**

ஆன்றோரும், சான்றோரும் வேறு வேறானவர். ஆலுதலும் தேவையே. அது அடங்கி, அவிதல் வேண்டும். அந்நிலையில் எழுவதே ஐந்து தூண்களைக் கொண்ட சான்றாண்மை.

சான்றாண்மையும் இரு வகை. பகட னைய சான்றாண்மையே மேலானது. அதன் வடிவாய் அமைந்த சான்றாளர்களே பகடு (ஆண் எருது) என நின்று இறை வனைத் தாங்கும் பேறு பெற்றனர் என்பது திரு முறைகள் காட்டும் வாழ்வியற் சிந்தனை..

# 'செத்ததும் சிறியதும்'

ஸ்வாமி

**அரியது செய்வார்:**

நேர நிர்வாகத்தில் (Time management) ஒன்று கூறுவர். 'குறைந்த வேலையில் அதிக லாபம் பெற வேண்டும்' என்பதே அது.

அப்படி ஒருவர் 'மதுரகவி'. இனிமையாகக் கவிதைப் பாட வல்லவர் என்றே அப்பெயர் வந்து அவரைச் சேர்ந்தது. அவர் பாடிய கவி ஒருபத்தே. அதன் பெயர் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு'. இதன் சிறப்பு ஸ்ரீநாதமுனிகள் இதை ஆயிரக்கணக்கில் உருப்போட்டு, நம்மாழ்வாரைத் தியான சமாதியில் கண்டு, ஆழ்வார்களருளிச் செய்த அத்தனை பாசுரங்களையும் அடையச் செய்தது.

இப்போது கூறுங்கள், இப்படிப்பட்ட 'பாக்களைப் பாடியது அரிய பெரிய செயல்தானே?'

இதுமட்டுமின்றி இப்பாத்தொகுப்பால் மட்டுமே இவரும் ஆழ்வாராக, 'மதுரகவி ஆழ்வாரா'கினார்.

**குரு உபாய நிட்டை:**

வைணவத்தில் பெருமாளை உபாய மாகக் கொண்டு அடைய வேண்டிய (புருஷார்த் தங்களை)வற்றை அடைவர். இதைப் போல குருவையே வழியாகக் கொண்டு மனித நோக்கின் எல்லையை அடைவதும் உண்டு. பெருமாளையும், குருவையும் உபாயமாகப் பணிந்து அவற்றை அடைபவரும் உண்டு.

'தேவு மற்றறியேன்' என்று ஆசார்யரை மட்டுமே பணிந்து வழிபட்டு அவராலேயே உயர்கதியை அடைந்தவர் மதுரகவியாழ்வார். மோட்சத்திலும் அப்படியே வாழ்ந்தார்.

நம்மாழ்வாரையே உபாயமாகப் பற்றித் தொண்டு புரிந்து அவராலேயே 'மயர்வற மதிநலம்' அருளப்பட்டு ஆழ்வாரானவர் மதுரகவி.

ஸ்வாமி விவேகானந்தரால் ஸ்ரீராமகிருஷ்ணர் அதிகப் பிரபலம் அடைந்தது போல, மதுரகவியாழ்வாரால் 'நம்மாழ்வார்' மிகப் பிரபலமாகி உலகை உய்விப்பவரானார். உலகம் போற்றும் திவ்யப் பிரபந்தம், ஆழ்வார் அருளிச் செயல்களாகப் பிரபலமடைந்தன. இது மதுரகவிகளின் குருபாய நிட்டையால்தான்.

**பகவானருள்:**

பகவானருள் நம்மாழ்வாரின் அவதாரம். அவருடைய நாலு வேத நிகரான அருளிச் செயல் பாசுரங்களும் நம்மாழ்வாரருள். இதைப் பிரசாரம் செய்து மக்களறியச் செய்தது மதுரகவியினருள். இது பிரசாரம் குறைந்து மக்களிடையே வழக்கின்றி மறைந்துவிட்ட போது ஸ்ரீமந்நாத முனிகளின் மூலம் மக்களுக்கு மறுபடியும் கிட்ட அருள் செய்தது, ஸ்ரீமதுரகவியாழ்வாருடைய 'கண்ணிநுண்சிறுத்தாம்பு...' பாசுரம். மனித குலம் வாழ 'மயர்வற மதிநலம்' பெற இதெல்லாம் நிகழ்த்தியது, பகவானருள்.



மதுரகவி ஆழ்வார்



## நம்மாழ்வார்

**மாறன்சடகோபன்:**

பிறக்கும்போதே ஜடவாயுவைக் கோபித்து விலக்கியவாறு பிறந்ததால் 'சடகோபன்' என்ற பெயர் பெற்றவர் நம்மாழ்வார். 'மாறன்' என்பது பாண்டிய நாட்டு திருப்பதி. ஆழ்வார்திருநகரியில் அவதரித்ததால் வந்த பெயர். உலகமாந்தர்க்கு மாறானவராகவும் இருந்தார்.

ஜடவாயுவின் தாக்கமின்றி சுத்த சத்துவ குணத்தில் இருந்ததால் பிறந்தது முதலே எவரிடமும் பேசாமல் திருப்புளியமரப் பொந்திலே நிட்டையிலிருந்தவர்.

பகவதருளால் 'காரி' என்பவர்க்குப் பிறந்த 'நம்மாழ்வார்', வகுளா பரணர், காரிமாறன், சடகோபன் என்றெல்லாம் குறிப்பிடப்பட்டார். மோட்ச நிலத்திலும் உள்ள மகிழம் பூவால் ஆன மாலை எப்போதும் சூடப் படுபவர் வகுளாபரணர் எனப்பட்டார்.

இவர்க்கு பகவான் மயர்வற மதிநலமருளினான். இதனால் எங்கும் செல்லாமல் இருந்த இடத்தில் இருந்தவாறே அனைத்தறிவையும் பெற்று அகில முழுவதுமுள்ள வைணவத் திருப்பதிகளை மங்களாசாசனம் செய்தார். வேதமும், கீதையும் பகவானே உரைத்ததுபோல, தென்தேசத்தில் அவற்றைத் தமிழிலும் உரைத்து 'வேதம் தமிழ் செய்த மாறன்' என்றானார். இதனால் நம்மாழ்வார் இறைவனவதாரமே எனப்பட்டார். வேதத்தில் தெளிவற்ற இடங்களையும் தெளிவாக அறிய, முரணான பொருளையும் முரணின்றிப் பார்க்க இவர் அருளிச் செயல்களுதவுகின்றன. நம் பெருமாள் என செல்லமாக வழங்கப்பெறும் ஸ்ரீரங்க நாதரால் 'நம் ஆழ்வார்' என உரிமையன்புடன் அழைக்கப்பட்டதால் ஸ்ரீசடகோபர், 'நம்மாழ்வார்' ஆனார்.

**நான்குவேதம்:**

'ருக்' வேத சாரமாக நூறு பாசுரங்கள் கொண்ட திருவிருத்தமும், 'யஜுர்' வேத சாரமாக ஏழு பாசுரங்கள் கொண்ட திருவாசிரியமும், அதர்வண வேத சாரமாக எண்பத்தேழு பாசுரங்கள் கொண்ட பெரிய திருவந்தாதியும், ஆயிரத்து நூற்றிரண்டு பாக்களும், நூறு திருவாய்மொழிகளும், பத்துப்பத்துகளும் கொண்ட உயர்ந்த புனிதமான, திருவாய் மொழி திவ்யப் பிரபந் தமாக வேதங்களுள் ஒப்புயர்வற்ற ஸாமவேத சாரமும் நம்மாழ்வாரால் அருளப்பட்டன.

**ஒளியைக்கண்டார்:**

இக்காலத்தில் அறி வொளியாக 'ஆல்ஃபா கலை' கூறப்படுகிறது. நீலநிற ஒளி இப்படி ஞானியர் தலையைச் சுற்றி ஒளிவட்டமாக உள்ள தெனப்படும்.

அப்படியானால் நம்மாழ்வாரிடமிருந்து இந்த ஞானஒளி வீசி எப்படிக் கிளம்பிச் சென்றிருக்கும்!

ஏற்கனவே அறிமுகப்பட்டிருக்கும் மதுரகவிகள் ஒரு காலத்தில் எங்கோ அமைச்சராக இருந்தவர், ஓய்வு பெற்று ஞானம் வேண்டி இமயமலை வரை சென்றிருந்தார்.

அங்கு வீசும் ஞான ஒளிக்கற்றையைக் கண்டு வியந்து, 'இது எங்கிருந்து வருகிறது? என அறிய ஆவலுற்று இரவிலே பயணப்பட்டு அந்த ஒளியைத் தொடர்ந்து தெற்கே வந்தார். ஸ்ரீரங்கத்தையும் தாண்டி, மதுரையையும் தாண்டி அது ஆழ்வார்திருநகரிக்கு அழைத்துவர, அங்கே ஒளிகிளம்பும் ஞானியாக வீற்றிருந்த ஆழ்வாரைக் கண்டார்.

**ஐயமுற்றார்:**

ஆச்சரியம் வாயடைக்கச் செய்தாலும், சிறிது ஐயமும் உற்றார். பேசாமல் கல் போலச் சமைந்திருக்கும் இவர் ஞானியா? அதாவது உண்மையை உணர்ந்து உலகக் காரணனை அறிந்தவரா, இல்லை; பித்துப் பிடித்து, சித்தம் பிசகிய புத்துவா? ஜடமா, ஞானமுள்ள அறிஞரா? என நிச்சயமாக அறிந்துணர நினைத்தார். ஊண், உறக்கம், ஒன்றுமின்றி பிறந்தது முதலே பெருமாளுடன் கலந்திருக்கும் சித்தத்துடன், **16** ஆண்டுகளைப் புளியமரப் பொந்திலேயே பத்மாசனத்தில் அமர்ந்திருப்பவரைப் பார்த்து, ஓசையுமின்றி இருக்கிறாரே என்று ஒரு தந்திரம் செய்தார்.

ஒரு கல்லை எடுத்து அவர் முன் சத்தம் வரும்படி போட்டார். 'காது கேட்குமா, கண் தெரியுமா, அறிவுண்டா' என அறியவே அப்படிச் செய்தார்.

**கண்மலர்ந்தார்:**

ஒளியால் கட்டியிழுத்துக் கொண்டு வரப்பட்ட மதுரகவிகளைத் திருக்கண்மலர்ந்து தீட்சையளிப்பது போல நம்மாழ்வார் கண்டார். மெய்சிலிர்த்த மதுரகவி தம்மை அறியாமல் ஏதோ உந்த 'அவர் பேசுவாரா? என அறிய, ஒரு கேள்வி கேட்டார்.

இதற்கு இவர் கூறும் பதிலிலிருந்து, 'இவர் ஞானியா, வெறும் பித்தரா?' என்று அறிந்து விடலாம் என்பது அவர் எண்ணம். அப்படிப்பட்ட கேள்வி இது.

**'செத்ததின் வயிற்றில் சிறியது**
**பிறந்தால்**
**எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?'**

'செத்தது' எது, 'சிறியது' எது? பிறப்பெது? தின்பது என்பதென்ன? எதைத் தின்னும்?' – இத்தனைக்கும் பதில் வேண்டும். தெரிந்து தெளிந்தவரே தெரிவிக்க முடியும். ஏனெனில், இது ஆத்ம சுநாத்மஞானம்.

**திருவாய் மலர்ந்தார்:**

புளியமரப் பொந்தில் பேசாது பித்தர் போலவிருந்தவர் பேசினார். அவர் கண்கள் மதுரகவியை ஊடுருவ திருவாய் மலர்ந்தார்.

ஆழ்வார் சுருக்கமாகச் சொன்னார்.

"அத்தைத் தின்று அங்கே கிடக்கும்"

"திங்கட்கிழமை என்று?"

"ஞாயிறுக்கு அடுத்த நாள்."

"ஞாயிறு?"

"திங்களுக்கு முந்தையநாள்"

– என்பது போல உள்ளதன்றோ?

மதுரகவி கேட்டகேள்விக்குப் பதிலானதால் அவருக்குப் புரிய உடனே ஆழ்வாரை அடிபணிந்தார். அவர், 'குறையே அற்ற மதிநலம்' கொண்ட ஞானி எனப் புரிந்து கொண்டார்.

**கேள்வி – பதில் பொருள்:**

முதலில் மதுரகவியின் கேள்விக்குப் பொருள் என்ன எனப் பார்ப்போம்.

செத்ததின் – ஜடமான உயிரற்ற அறிவும் தன்னுணர்வுமற்ற உடலின்; வயிற்றில் – உள்ளே; சிறியது அணுவளவான ஜீவாத்மா; பிறந்தால் – சேர்ந்து உலகில் பிறந்தால் எத்தைத் – எதை; தின்று – உண்டு (அனுபவித்து); எங்கே – எங்கே; கிடக்கும்? – எங்கு இருக்கும்?– இது கேள்வி.

அதாவது, 'ஜடமான உடலில் அதை விடச் சின்ன ஜீவாத்மா சேர்ந்து உலகில் பிறவி பெற்றால், எதை அனுபவித்தபடி எங்கே இருக்கும்?' என்பது கேள்வி.

அத்தைத்– அந்த உடம்பினால் ஜடப்பொருள்களையே தின்று – அனுபவித்து இன்ப துன்பமடைந்து, அங்கே –அந்த உடலிலேயே கட்டுப்பட்டு; கிடக்கும் – மீண்டும் மீண்டும் உடல்களைச் சேர்ந்து பிறந்திறந்து கொண்டு உலகில் உழன்று கொண்டு இருக்கும் என்பது பொருள். உடல் வேறு, ஆத்மா வேறு எனப்படுகிறது.

அதாவது, 'பிறவிப் பெருங்கடலில் சம்சாரத்தில் உடலில் சேர்ந்த ஜீவன் உடலிலேயே உலக இன்பதுன்பங்களை அனுபவித்துக் கொண்டு அகப்பட்டு இருக்கும்' என்பது கருத்து. கட்டை போன்ற உடலில் ஜீவனிருந்து இயங்கி இன்பதுன்பமடைந்து வருவதை அறிவிக்கிறது.

**குருவே கதி:**


உடனே, 'நம்ஆழ்வாரே கதி; உயர் நிலையடைய அவரே வழி – உபாயம்' எனப் பணிந்து தொண்டாற்றிக் கொண்டு ஞானமளிக்கப்பட்டு இருந்தார். 'வைகுண்டம் சென்ற பின்பும், அங்கும் ஆசார்யருக்கே தொண்டாற் றியவாறிருந்து வருகிறார்' என்பர்.

குரு சிந்தனை சேவையால் செத்ததான உடலைப் பிரிந்து, அறிவுள்ள ஜீவன் பரமனைச் சேருகிறது.

# ஆரழலாகி நின்ற அண்ணாமலையாரும் சொக்கப்பனைத் தீ வழிபாடும்

**சி**வபெருமான் மகா அக்னியின் வடிவமாக விளங்குகின்றார். விண்ணிற்கும், பாதாளத்திலும் பரந்து நிற்கும் பெரிய நெருப்புத் தூணாகச் சிவபெருமான் நின்றதைப் பல்வேறு புராணங்கள் சிறப்புடன் கூறுகின்றன. திருவண்ணாமலைத் தலபுராணம் இதனைத் தனிச்சிறப்புடன் குறிக்கின்றது. இதன்படி, ஒருசமயம் பிரமனும், திருமாலும் தங்களுக்குள் யார் பெரியவர் என்று போட்டியிட்டுப் போர் செய்து கொண்டிருந்தனர். அப்போது அவர்களுக்கிடையே சிவபெருமான் பெரிய நெருப்புத் தூணாக நின்றார். அந்தத் தூணின் உச்சி வானுலக எல்லையைக் கடந்தும், அதன் அடி பாதாளத்தை ஊடுருவியும் நின்றது. புதியதாகத் தோன்றிய அந்த நெருப்புத் தூணைக் கண்டதும் திருமாலும் பிரமனும் எல்லையற்ற ஆச்சர்யம் அடைந்தனர். தம்முள் நடைபெற்ற சண்டையை நிறுத்திவிட்டு ஏதும் பேசாது நின்றனர். பிறகு நம்முள் சண்டையிட வேண்டாம். இதன் அடியையும் முடியையும் தேடுவோம். யார் முதலில் அதைக் காண்கின்றாரோ அவரே பெரியவர் என்று ஏற்றுக் கொள்வோம் என்று ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

பின்னர் பிரமன் பெரிய அன்னத்தின்



வடிவம் தாங்கி பெருத்த ஆரவாரத்துடன் விண்ணில் பறந்து முடியைத் தேடிப் புறப்பட்டார். திருமால் பன்றி உருக்கொண்டு பூமியை அகழ்ந்து அதன் அடியைத் தேடிச் சென்றார். காலங்கள் பல கழிந்தன. இறுதியில் அயர்ந்து தளர்ந்து போய் பிரமனும், திருமாலும் அந்த நெருப்புத் தூணின் அடியையும் முடியையும் காணாது சோர்ந்து வீழ்ந்தனர். அந்தத் தூணினின்று சிவபெருமான் வெளிப்பட்டு இருவரையும் நோக்கினார். அவர்கள் தங்கள் உண்மை நிலையை உணர்ந்தனர். சிவபெருமானே பெருந்தலைவன் என்று அறிந்து அவரைத் துதித்தனர். பின்னர் சிவபெருமான் நெருப்பு மலையாக இருந்த தனது நிலையை மாற்றிப் பொன்மயமான மலையாக மாறி அவர்களுக்குக் காட்சி தந்தார்.

இதனை நினைவு கூறும் வகையில் கார்த்திகை தீப நாளில் சொக்கப்பனை கொளுத்துதல் என்ற வழக்கம் கடைப்பிடிக் கப்பட்டு வருகின்றது. 10 முதல் 20 அடி உயரம் வரையுள்ள பனை மரத்தினை நட்டு அதனைச் சுற்றிலும் பனையோலைகளைக் கட்டி கூம்பு வடிவில் அமைப்பர். பொதுவாக ஒற்றைக் கூம்பே அமைப்பது வழக்கம். சில தலங்களில் சுவாமி அம்பிகை ஆகிய இருவரையும் நினைவூட்டும் வகையில் இரண்டு கூம்புகளை அமைக்கின்றனர்.

கார்த்திகை தீபத் திருநாளன்று மாலையில் சூரியன் அஸ்தமித்த ஒரு நாழிகைக்குள் (சுமார் 6 மணி அளவில்) சிவமூர்த்தியைப் பரிவாரங்களுடன் இதன் முன்னே எழுந்தருளவைத்து இந்தக் கூம்பு வடிவச் சொக்கப்பனைகளைச் சிவமாகவே பூசிப்பர். பின்பு அவை கொளுத்தப்படும். அந்நிலையில் அவை ஓங்கி, கொழுந்துவிட்டு எரியும்.

அந்தத் தீயை வானுக்கும் மண்ணுக்கும் இடையே தழல் வடிவாய் நின்ற சிவபெருமானாகவே போற்றி வழிபடுவர். பின்னர் அத்தீயின் எஞ்சிய சாம்பலைப் பிரசாதமாக ஏற்றுக் கொள்கின்றனர்.

இந்தச் சாம்பலை வயலில் தெளித்தால் அது நன்கு விளையும் என்று நம்புகின்றனர். இந்தக் கரியில் இருந்து செய்யப்படும் சாந்தினை அணிந்து கொள்வதும் உண்டு.



சிவாலயங்கள் அனைத்திலும் கார்த்திகை மாதத்துக் கிருத்திகை நாளில் இந்த சொக்கப்பனைகளைக் கொளுத்தி அப்பொழுது எரியும் அக்னியைச் சிவ வடிவமாகப் பூசித்து விழா கொண்டாட வேண்டுமென்று பூஜாபத்ததி நூல்கள் கூறுகின்றன.

மலைநாடுகளில் உள்ள பழங்குடியி னரிடத்தில் கார்த்திகை விழாவும் சொக்கப்பனை கொளுத்துதலும் தனிச்சிறப்புடன் கொண்டாடப் படுகின்றன.

நெருப்பு வடிவமாக மலை போலவும் நெடுந்தூண் போலவும் நின்ற சிவபெருமானைத் தேவாரம் திருவாசகம் முதலியன சிறப்புடன் பேசுகின்றன.

**சிவமஞ்சரி செம்மல்**
**பூசை. ச. அருண வசந்தன்**

# கந்த சஷ்டியின் மகிமை

*சித்தாந்த இரத்தினம் செ.வே.சதாநந்தன்*
**தலைவர் – சைவ சித்தாந்தப் பெருமன்றம்**
**தலைவர் – மகா தேஜோ மண்டல சபை**

முருகன், குமரன், குகன், கந்தன், ஆறுமுகன் என்றெல்லாம் பக்தர்களால் புகழப் பெறும் செந்தமிழ்க் கடவுளின் பல்வேறு விழாக்களில் மிகவும் முக்கியத்துவம் பெற்ற விழாவே கந்த சஷ்டிப் பெருவிழாவாகும். சஷ்டி என்றால் ஆறு என்று பொருள். எனவே சஷ்டி விழா ஆறுநாள் விழாவாகும். கச்சியப்ப சிவாசாரியரின் கந்த புராணமும், பாம்பன் சுவாமிகளின் முதல்வன் புராண முடிப்பும் இவ்விழாவை விளக்குகின்றன.

தேவர்களைக் கொடுமைப்படுத்திய சூரபதுமன், அவன் தம்பிகளாகிய தாருகன், சிங்க முகன் ஆகியவர்களோடு முருகப் பெருமான் போரிட்டு வென்று தேவர்களை சிறை மீட்டு, அவர்களுக்கு ஆட்சியுரிமை தந்து, தேவருலகை வாழ வைத்த வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது கந்த சஷ்டிப் பெருவிழா. செவ்வேட் பரமனாகிய கந்தனுக்கும், சூரபதுமனுக்கும் போர் நடைபெற்ற இடம் திருச்செந்தூர்.

போருக்குப் பின்னர் முருகன் இந்திரன் மகளாகிய தெய்வயானையை மணம் செய்த இடம் திருப்பரங்குன்றம். அது ஏழாம் நாள் விழா.

செந்தமிழ் நாட்டில் நடைபெற்ற வரலாற்றை மையமாகக் கொண்ட செந்தமிழ்க் கடவுளின் தெய்வப் பெருவிழாவே கந்த சஷ்டிப் பெருவிழா. ஆன்மாக்களுக்கு அல்லது மானிட உயிர்களுக்கு மூன்று வகையான அழுக்குகள் உண்டு. மூலமாகிய முதல் அழுக்கே ஆணவம். அதை ஒட்டி ஆன்மாக்களுக்கு உண்டாகிய இரண்டு அழுக்குகள் உண்டு. அவைகள் மாயை, கன்மம் எனப்பெறும். மாயையானது உலகப் பொருள்களில் கவர்ச்சியை உண்டாக்கி ஆன்மாக்களுக்கு மோகத்தை உண்டு பண்ணும். ஞானிகளைக் கூட மயங்க வைத்துவிடும். மயக்கத்தை உண்டாக்குதலும், ஆன்மாக்களை உலகப் பொருளின் மேல் பற்று முதலியவைகளை ஏற்படுத்துதலும் ஆகிய இரண்டு வகைகளில் செயற்படுவது மாயை, சூரபதுமனின் ஒரு தம்பியாக நின்ற தாருகனே மாயை மயமாக நின்று செயல்படுபவன்.

அடுத்த அழுக்கானது கன்மம். இதுவும் இரண்டு வகைப்படும். நல்வினை, தீவினை என சிங்கமுகன் கன்ம மயமாக நின்றவன்.

மூன்றாவது மூல அழுக்கே ஆணவம். இதுவும் நான் என்றும், எனது என்றும் செயல்படும். சூரபதுமன் ஆணவ மயமாக நின்றவன். மூன்று அழுக்குகளும் ஆறாகப் பிரிந்து செயல்பட்டன. ஆகையால் ஆறு நாட்களில் அவைகளை அழித்து ஆன்மாக்களுக்கு உண்மை ஞானம் கொடுத்தான் கந்தன் என்பதே கந்த சஷ்டிப் பெருவிழாவின் தத்துவம்.

இந்த மூன்று அழுக்குகளிலிருந்து நீங்கிய மனிதனின் ஆன்மா இறைவனடி சேர்ந்து இன்புற்றிருக்கும். உலகமும், உலகப் பொருள்களும் இறைவன் படைப்புகள் என்று உணர்ந்தால் மாயையிலிருந்து விடுபடலாம். தீவினைகளை எப்போதும் செய்யக் கூடாது. நல்வினைகளைச் செய்யும்போது அவைகள் நம்


முயற்சியென்று கருதாமல், அவைகளை இறைவன் நம் மூலமாகச் செய்விக்கிறான் என்று உணர வேண்டும். அப்போது நல்வினைப் பயன் நம்மைச் சாராது. மறுபிறப்பும் ஏற்படாது. அற வாழ்க்கையை மேற்கொண்டு, எப்போதும் இறைவனைச் சிந்தித்து எல்லா நிகழ்வுகளும் அவனால் நிகழ்கின்றன என்று கருதினால் ஆணவத்திலிருந்து விடுபடலாம்.

இத்தத்துவத்தை நம் கையிலுள்ள ஐந்து விரல்கள் மூலம் அறியலாம். பெருவிரல் இறைவனையும், அதற்கடுத்த ஆள்காட்டி விரல் மற்ற மூன்று விரல்கள் இணைப்பிலிருந்து விலகி சற்று வளைந்தவுடன் பெருவிரலை அடைய முடியும். அதாவது ஆன்மா ஆணவம், கன்மம், மாயை ஆகியவை களிலிருந்து விடுபட்டால் இறைவனடி சேரும். தட்சிணாமூர்த்தி சுவாமிகளின் 'சின்முத்திரை' இந்தத் தத்துவத்தைக் குறிக்கும். இறைவனுக்குத் தேங்காய் படைப்பதும் இத்தத்துவத்தைக் குறிக்கும். பச்சை மேல்மட்டை மாயையும், நார் கன்மத்தையும், ஓடு ஆணவத்தையும் குறிக்கும். இம்மூன்றும் நீக்கப்பட்டவுடன் தேங்காயின் வெள்ளைப் பருப்பு சுத்த ஆன்மாவைக் குறிக்கும்.

கந்தப் பெருமான் சூரபத்மனை வென்று அவனைத் தன் மயில் வாகனமாகவும், சேவற்கொடியாகவும் மாற்றினான். சிங்க முகாசூரன் உமையம்மையின் சிங்க வாகனமாக மாற்றப்பட்டான். தாரகாசூரன் அய்யனாரின் யானை வாகனமாக நீக்கப்பட்டான். கந்த சஷ்டி



விரதத்தை முறையாக அனுஷ்டித்தால் கந்தப் பெருமான் திருவடியடைந்து நிலைத்த இன்பம் பெறுவோம்.



சின்னமே! இவ்வாறு வாரியார் சுவாமிகள் விளக்கம் அளித்துள்ளார்கள்.

முருகப் பெருமான் வேலாயுதம் பெற்ற வரலாறு குறித்த சில செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

இந்திரன், மற்றத் தேவர்களுடன் திருக்கயிலைக்குச் சென்றான். சூரனால் தங்களுக்கு ஏற்பட்ட அனைத்துத் துன்பங்கள் குறித்தும் எடுத்துரைத்தான். அவற்றைத் தீர்த்தருளுமாறு ஈசனிடம் வேண்டினான்.

இந்திரனின் முறையீட்டைக் கேட்ட சிவபெருமான், "இனி நீங்கள் உள்ள மெலிவெய்த வேண்டாம்," என்று கூறி, அருகில் இருந்த முருகனிடம் செய்ய வேண்டிய பணிகளை எடுத்துரைத்தான்.

"குமரனே! பூமியை அலைவு செய்து, உயிர்களுக்குத் துன்பம் விளைவித்து, விண்ணவர்களின் ஊரைத் தீயிட்டு அழித்து, கொடுமைகள் புரியும் எல்லையற்ற வன்மை உடைய சூரனை அவனுடைய கூட்டத்தினருடன் அழித்திடுக! நீதிநூல்களின் நெறியை நிலை நிறுத்திடுக! இந்திரனின் பேரரசை அவனிடம் மீண்டும் அளித்திடுக! அமரர்களின் துயரத்தைத் துடைத்துத் திரும்பி வருக!" என்றான், எவ்வுயிர்க்கும் தந்தையாகிய ஈசன்.

# வேல் கொடுத்தது சக்தியா? சிவனா?

பருத்தியூர்
டாக்டர் கே.சந்தானராமன்

**வே**ல், முருகனின் சிறப்பு ஆயுதம். தமிழகத்தில் வேல் வழிபாடு தொன்று தொட்டு நடைபெற்று வருகிறது. 'படை' என்று கூறினால், அது முருகனின் வேற்படையையே குறிக்கும். அத்தகைய வேற்படை வழிபாடு நடைபெற்ற தலங்களே படைவீடு என்று வழங்கியதாகவும் ஒரு கருத்து உண்டு. வேலாயுதத்தை, 'சக்தி வேல்' என்று குறிப்பிடுகின்றனர்.

வேலாயுதம் குறித்து வாரியார் சுவாமிகள் தெளிவான விளக்கம் அளித்துள்ளார்கள். உயர்நிலை அறிவாகிய ஞானத்திற்கு மூன்று இலக்கணங்கள் உண்டு. ஆழ்ந்த சிந்தனை, பரந்த நோக்கு, கூர்மையான ஆராய்ச்சி ஆகியவையே ஞானத்தின் இலக்கணங்கள். அதனால்தான் வாலறிவனாகிய சிவபெரு மானை, "ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே!" என்று மாணிக்கவாசகர் அழைக்கிறார். ஆகவே, வேலாயுதம் ஒரு கொலைக்கருவி அன்று, ஞானத்தை உணர்த்தும் ஒரு

ஏகாதச ருத்திரர்கள் என்னும் பதினொரு உருத்திரரும் முருகனின் பதினொரு படைக்கலன்களாக விளங்கும்படி ஈசன் திருவுள்ளம் கொண்டான்.

தோமரம், கொடி, வாள், வச்சிரம், அம்பு, அங்குசம், மணி, தண்டாயுதம், வில், மழு, கோடாரி ஆகிய பதினொரு படைக்கலன் களாக வடிவம் கொண்டனர் ஏகாதச உருத்திரர்கள். பன்னிரண்டாவது ஆயுதம்தான் ஞானசக்தி வேலாயுதம்!

ஏவி விடுத்தால் எல்லா அண்டங்களையும், ஐம்பூதங்களையும் அழிக்க வல்லதும், உலகில் உள்ள உயிர்களை ஒரே நேரத்தில் முடிக்கவல்லதும், எவர்மேல் விடுத்தாலும் அவர்கள் ஆற்றல்களையும் வரங்களையும் சிந்தச் செய்து, உயிரைக் குடிக்க வல்லதும், அனைத்துப் படைக்கலன்களிலும் தலைமை பெற்றதும் ஆகிய சிறப்புகளை உடைய ஒப்பற்ற, சிறப்பான, ஒளிரும் வேலாயுதத்தை நல்கி, தன்னுடைய மகனிடம் அளித்தான் சிவபெருமான்.

**ஆயுதற் பின்னர் ஏவில் மூதண்டத்து**
**ஐம்பெரும் பூதம் அடுவது**
**ஏய பல்லுயிரும் ஒருதலை முடிப்பது**
**ஏவர்மேல் விடுக்கினும் அவர்தம்**
**மாயிருந் திறலும் வரங்களும் சிந்தி**
**மன்னுயிர் உண்பது எப்படைக்கும்**
**நாயக மாவது ஒருதனிச் சுடர்வேல்**
**நல்கியே மதலைகைக் கொடுத்தான்.**

பன்னிரண்டாவது ஆயுதமாகிய ஒரு தனிச் சுடர் வேலை, "மதலைகைக் கொடுத்தான்" என்று கச்சியப்பர் கூறுகிறார். அதாவது, சிவனே வேலாயுதத்தை முருகனிடம் கொடுத்தான் என்கிறார். ஆனால், சக்தியே வேலைக் கொடுத்ததாகப் பலரும் எண்ணுகின்றனர். சூரசம்கார விழாவிலும், சக்திவேல் கொடுக்கும் மரபே உள்ளது. அதாவது, அம்பிகை கையில் சாத்தப்பட்டிருக்கும் வேலாயுதத்தை, முருகன் பெற்றுச் செல்லும் காட்சியே நடைபெறுகிறது. ஏன் இந்த முரண்பாடு? வேல் கொடுத்தது சக்தியா? அல்லது சிவனா? சைவ சித்தாந்த வழியில் ஆய்ந்தால்தான் இதற்கு விடை காண முடியும்.

"அருளது சக்தியாகும் அரன் தனக்கு" என்பது சிவஞான சித்தியார். அதாவது, சிவபெருமானின் அருள்தான் சக்தி என்று கூறுகிறார். சைவர்கள் சக்தியின் வழியே வெளிப்படும் செயலையும் சிவனின் செயலாகவே கொள்வர்.

திருஞானசம்பந்தருக்குத் திருமுலைப்பால் கொடுத்து அழுகை தீர்த்து அருளினாள் அம்பிகை. அதனைக் குறிப்பிடும் சேக்கிழார் பாடல், ''அழுகை தீர்த்து அங்கணர் அருட்செய்தார்'' என்றே குறிப்பிடுகிறது, அதாவது, அழகிய கண்களை உடைய சிவபெருமானே அருள் செய்தார் என்று கூறுகிறது. அவ்வாறே இங்கும், "ஒரு தனிச் சுடர்வேல் நல்கி மதலைகைக் கொடுத்தான்," என்கிறார் கச்சியப்பர்.

"நல்கி மதலைகைக் கொடுத்தான்" என்று கூறுகிறார். நல்குதல் என்றாலும் கொடுத்தல் என்றுதான் பொருள். சிவபெருமான் வேலாயுதத்தைச் சக்தியிடம் நல்கினான். அவள் குழந்தை முருகனிடம் கொடுத்தாள் என்று உய்த்துணர வேண்டும்.

அலுவலகத்திலிருந்து திரும்பி வந்த கணவர் குழந்தைக்காக இனிப்பு வாங்கி வந்தார். அதனை மனைவியிடம் கொடுத்து விட்டு, கை, கால் கழுவி வரச் சென்றார் கணவர். மனைவி தனது இரண்டு குழந்தை களுக்கும் இனிப்பைக் கொடுத்தாள். அடுத்த வீட்டுக்கு விளையாடச் சென்ற ஒரு குழந்தை, "எங்கம்மா 'சாக்லேட்' கொடுத்தார்," என்றது. மற்றொரு குழந்தை, "எங்கப்பா, 'சாக்லேட்' கொடுத்தார்," என்றது. தந்தை வாங்கி வந்த இனிப்பை, தாய் கொடுத்ததாகச் சொன்னாலும் தவறாகாது அல்லவா? அதுபோலத்தான் சிவன் கொடுத்ததாகச் சொன்னாலும் தவறாகாது. சக்தி கொடுத்ததாகக் கூறினாலும் தவறாகாது.

இறைவன் சக்தியிடம் நல்கிக் கொடுத்ததால், வேல் வாங்கும் விழாவில் அம்பிகை சன்னதியில் சாத்தப்பட்ட வேலாயுதத்தை வாங்கிச் சென்று முருகன் சூரசம்காரம் செய்யும் மரபு ஏற்பட்டுள்ளது. சிக்கலில் வேல் வாங்கும் விழா மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. அப்போது, முருகனின் முகத்தில் வியர்வை அரும்பும் விந்தையை இன்றும் காணலாம்.

இலட்சத்து ஒன்பது வீரர்களுக்கும், தேவையான படைக்கலன்களை வழங்கியருளினான் சிவபெருமான். மேலும், அண்டாபரணன், நந்தி, உக்கிரன், சண்டன், அக்கினிக் கண்ணன், சிங்கன் முதலான பூதப்படைத் தலைவர்களை அழைத்து, இரண்டு ஆயிரம் வெள்ளம் சேனையுடன் துணையாகச் செல்லுமாறு பணித்தான். மனோவேகம் என்னும் தேரினையும் தனது குமாரனுக்காகப் படைத்துக் கொடுத்தான் சிவபெருமான்.

கந்தவேள், தன்னுடைய தாய், தந்தையரை மும்முறை வலம் வந்து விழுந்து வணங்கினான். தனது திருவடியில் அமர்த்தி, உச்சி முகர்ந்த இறைவன், கந்தக் குழந்தையை உமாதேவியின் கரத்தில் அளித்தான். தேவியும் குழந்தையை அணைத்து, முத்தமிட்டு, உச்சி முகர்ந்தாள். தேவர்கள் குறைகள் நீங்கச் சூரனை வென்று வருக!'' என்று வாழ்த்தியருளினாள்.

இவ்வாறு முருகன் வேல் வாங்கிப் புறப்பட்ட செய்தி கச்சியப்பரின் கந்த புராணத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

**சூரன் ஆணவத்தின் வடிவம். ஈசன் அளிக்கும் ஞானம் என்ற வேலாயுதம் ஆணவம் என்ற அசுரனை அழித்துப் பெருவாழ்வு அளிக்கிறது என்பதே சூரசம்காரத்தின் உட்பொருள் ஆகும்.** ●

# ஆழ்வார்கள் அமிழ்தம்

## முதலாழ்வார்கள் கண்டார்கள், காட்டினார்கள்


அநுராதா சேஷாத்ரி
திருவரங்கம்


அறம், பொருள், இன்பம், வீடு – என்ற நான்கினையும் விரிவுபடப் பேசுகின்ற அத்துணையும் ஆன்றோர்கள் "பேரிலக்கிய நூல்கள்" என்பர். இவைகளில் ஒன்றோ, அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவைகள் குறைந்து காணப்படும் நூல்கள் யாவும் "சிற்றிலக்கியங்கள்" என வரைப்படுத்துவர். இப்படிப்பட்ட சிற்றிலக்கிய நூல்களை நுண்மாண் நுழைபுலம் வாய்க்கப் பெற்ற நமது சான்றோர்கள் தொண்ணூற்றாறு (96) வகையாகப் பிரித்துள்ளனர்; இவைகள் 'பிரபந்தம்' எனவும் கூறுவர். பிரபந்தம் எனில் 'நன்கு கட்டப்பட்டது' என்று பொருள் ஆகும். இப்படிப்பட்ட சிற்றிலக்கியம், ஒல்காப் புகழுடைய தொல்காப்பியனார் காட்டும் "விருந்து" என்னும் யாப்பு வகைதனில் பரக்கக் காணலாம்.

நாம் உய்வதற்கு, பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட ஆழ்வார்களால் அருளப் பெற்ற பண் சுமந்த பனுவல்கள் "நாலாயிர திவ்யப் பிரபந்தம்' எனவும் கூறப்படும். வேதங்கள் யாவும், கற்போர் நெஞ்சினில் பதியும் படியாகப் பழகு தமிழில் கவினுறப் பாடப்பட்டிருப்பது இதற்கோர் பெருஞ்சிறப்பாகும். எழுதப்படாமல் வேதங்கள் சீடனுக்கோ, தந்தை மகனுக்கோ கூறிவந்த காரணத்தினால் 'எழுதாக் கிளவி' என வேதங்கள் தமிழிலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"நிறைமொழி மாந்தர் (Perfect People) ஆணையிற் கிளர்ந்த மறைமொழி மந்திரம்" எனவும் இலக்கணம் பேசுகின்றது. வேதம் எனில் பிரகாசமான ஒளி, ஆனால் தமிழில் மறை என்றால் ''மறைத்து வைக்கப்பட்டது'' எனப் பொருள் படும்படி ஏன் கூறினர். எவ்வளவுதான் சத்தான உயரியது (விஷயம்) ஆயினும், அதை உள்வாங்கிக் கொள்ளும் மனநிலை அற்றவனுக்கு அதை எவ்வளவு 'பாடம்' செய்து சொன்னாலும், அது 'பாறையின் மீது விதைத்திட்ட வித்தே போலவும், பன்றியின்



பூதத்தாழ்வார்

முன் போட்டிட்ட முத்தே போலவும்" போகுமே ஆதலால் "மறை" எனப்பட்டது என்பர் ஆன்றோர்.

உள்வாங்கிக் கொள்ளும் ஆர்வம்தான் மறைதனைத் தெரிந்து கொள்ள உயரிய அருகதையாகும் என்பது இதனால் நன்கு புலனாகும். நிற்க!

இக்கட்டுரையின் நோக்கமே மறையின் பொருள்களைச் செந்தமிழில் கூட்டி ஒன்றத் திரித்து திருவிளக்கு எரிவித்த பூவிலே பூத்த முதலாழ்வார்கள் மூவரும் இவண் படம் பிடித்துக் காட்டுதலே ஆகும்.

கட்டியிருக்கக்கூடிய ஆடையே கூட பாரம் என்று கருதும் மூன்று தமிழர்கள்; ஒருவரை ஒருவருக்குத் தெரியாது; தனித்தனியே வெவ்வேறு இடங்களிலிருந்து பயணம் செய்கிறார்கள். முகம் கொடுத்து ஒருவரை மற்றவர் பார்த்தது இல்லை எனினும், மூவருக்கும் ஒத்த ஒரே நோக்கம் இருந்தது. அண்ட சராசரங்களில் ''எது மெய்ப்பொருள்? அதை மெய்யாகவே காணவேணும் (நெஞ்சமே) மெய்ம்மையைக் காண விரும்பு) காண்பது மட்டுமின்றி தாம் கண்டவற்றை உலகோரும் காணச் செய்திடல் வேண்டும்'' என்பதே. இப்படிக் கண்டு காட்டிட பேயாய் பூதமாய் இங்கு அங்கு எனாதபடி அலைந்து திரிந்தார்கள். ஆடி ஆடி அகம் கரைந்து, நாடி நாடி நலம் தரும் பொருளை, நள்ளிரவும் பகலும் நாமும் காண நாத்தழும்பேறத் துதிக்க எப்படி இறைவனும் அவர்கட்கு உறுதுணையானான் என்பதை காண்போம்.

இந்த மூவரில், ஒருவர் காஞ்சிபுரத்துக் காரர்; வேறு ஒருவர் மகாபலிபுரத்தார்; மூன்றாமவர் மயிலாப்பூரார்.

பாண்டி நாடு முத்துடைத்து; சேர நாடு வேழமுடைத்து; சோழநாடு சோறுடைத்து; தொண்டை நாடு சான்றோருடைத்து என்பது முதுமொழி அன்றோ! ஆம் சான்றோர்கள் மிகுந்த தொண்டை நாட்டினில் தோன்றிய இவ்யோகிகள் ஏனையோரிலும் மாறுபட்ட வர்கள். ஆம்! யோகிகள் எனில், ஒரு குறிப்பிட்ட இடத்தினில் அமைதியாக அமர்ந்து ஒருமைப்பட்ட மனத்துடன் தங்கள் இஷ்ட தெய்வத்தைத் தியானிப்பார்கள். ஆனால், இவர்கள் அகத்தினிலே அமைதி கொண்டு, புறத்தே பரபரப்பாய் இங்குமங்கும் எங்குமோடி சிறந்த மெய்ப்பொருளைக் கண்டு விண்டுரைக்க விழைந்தார்கள். ஆதலினாலே, இவர்கள் "ஓடியும் திரியும் யோகிகள்," "தீர்த்தகரர் ஆமின் திரிந்து'' எனப் பேசப்பட்டார்கள்.



பொய்கையாழ்வார்

"தீர்த்தகரர்" என்பது "தீர்த்தங்கரர்" என்பதின் சிதைவு. தீர்த்தங்கரர் என்னும் சொல் சமணப் பெரியவர்களைக் குறிக்கும்; ஆனால், வைணவப் பெரியவர் களாகிய இவர்கள் எப்படி இவ்விதம் கூறப்பட்டார்கள். எனில், தாம் திரிந்த இடங்களையெல்லாம் தூய்மையான தீர்த்தங்கள் ஆக்கினார். ஆதலினால் தீர்த்தங்கரர் ஆயினர்.

இப்படி இவர்கள் திரிவதால், இவர்கள் பாததூளி படுதலால், ''தவம் உடைத்து இத்தரணி'' என்னுமாப் போலப் பேசப்பட்டது. இத்தீர்த்தங்கரர்கள் இறைவனது கூட்டுவிக்கும் அருளால், இன்று நாம் 'திருக்கோவிலூர்' என்று

கூறும் (அன்று, திருமுனைப்பாடி) ஊரை நோக்கிப் பயணித்தார்கள்.

காய்கதிர்ச் செல்வன் கடலிடை மறைந்தான். அந்தியம் போதில் அரியுருவம் போல், மெய் கறுத்து பாழியந்தோளுடைய பத்மநாபன் கையாழி போல் மின்னல் வெட்டி, யோகிகள் கூட நாமும் செல்வோம் இடி இடித்தூதியது.

முதலில், காஞ்சிபுரத்துக்காரர், திருக்கோவிலூரை அடைந்து ஒரு வீட்டு வாசலில் நின்று "இரவில் மட்டும் தங்க இடம் கிடைக்குமா?'' என்கிறார். வீட்டுக்காரர், மிகவும் ஒடுக்கமான தன் வீட்டின் பக்கலில் இருந்த இடைக்கழியைக் (ரேழி) காட்ட, அந்த மழையில் வந்த அலுப்பு நீங்க உள்ளே சென்று தாழிட்டு, 'நாராயணா' என காலை நீட்டிப் படுத்து விடுகின்றார்.

யோகிகள் கூட நாமும் செல்வோம்

அந்த நேரம் பார்த்து, மாமல்லபுரத்துக்காரரும் அங்கு வந்து, வீட்டின் முன் நின்று, உள்ளே தங்க இடம் இருக்குமா, எனக் கேட்டு கதவைத் தட்டுகிறார். கதவைத் திறந்து காஞ்சிபுரத்தார், ''ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம்'' எனச் சொல்லி, உள்ளே வரவிட்டு கதவைத் தாழிட்டுக் கொள்கிறார். "கையது கொண்டு மெய்யது போர்த்தி, காலது கொண்டு மேலது தழுவி'' என்றுமாப்போல, அவர்கள் இருவரும் உள்ளே தாழிட்டு அமர்ந்து இருக்கையிலே, கொட்டும் மழையில் அங்கு ஓடிவந்த மயிலாப்பூரார் "இங்கு படுக்க ஓரிடம் உண்டா?" எனக் கதவைத் தட்ட, "ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம்' எனக் கூறி உள்ளே அழைத்து தாளிட்டுக் கொண்டு நின்ற வண்ணம் தங்களைத் தாங்களே அறிமுகம் செய்து கொள்கிறார்கள். ''காஞ்சிபுரத்துக்காரர்'' தன் பெயரை 'பொய்கை' என்றும் 'மாமல்லபுரத்தார்' தான் "பூதம்" என்றும் மூன்றாவதாய் வந்த மயிலாப்பூரார் தன் பெயர் 'பேய்' என்றும் அறிமுகப்படுத்திக் கொள்கின்றார்கள்.

வெளியே மழை, மின்னல், இடி கடுங்குளிரில் முகம் தெரியாத அந்த 'கும்' இருட்டில் மூவரும் அகம் தொட்டு தங்கள் உள்ளக்கிடக்கைகளை (ஒருவரை ஒருவர் கண்களால் பார்க்காமலே) பரிமாறிக் கொள்கிறார்கள்.

இந்த சமயத்தில்தான், அங்கு ஒரு பெரிய அதிசயம் நிகழ்கின்றது. ஆனால், உண்மை. நான்காவது ஒருவர், வீட்டு முகப்பிலே நின்று இவர்களைப் போல கேட்காமலே, உள்ளே தாழிட்ட வீட்டினுள்ளே, அந்த இருளில், திருட்டுத்தனமாய் வந்து, தன்னை இன்னார் என்று அறிமுகப்படுத்திக் கொள்ளாமல் இம்மூவரையும் நெருக்குகின்றான். அவன் சாமான்யமானவனாய் தெரியவில்லை; நெய்யும் பாலும் அதுவும் யாரும் காணாமல் திருடித் தின்ற கள்வன் போல் உள்ளான். கரிய மேனியனோ? இருளிலும் கரியமேனியனோ? தெரியவில்லையே என அங்கலாயிக்கும்போது, விளக்கு ஒன்று இருந்து, ஏற்றி வைத்தால் நன்கு அந்தக் கள்வனைக் கண்டு விடலாம் என எண்ணினார்.

உடனே, பொய்கையார் மயிலைக் கடற்கரையில் கடலில் உதிக்கும் தீபம் போன்ற சூரியனைப் பார்த்துப் பழகியவர் ஆதலினாலே, சூரிய உதயம் அவர் கண்கள் முன் வருகின்றது. உடனே அவர், பூமியை அகல் விளக்காகவும், கடலே நெய்யாகவும், வெப்பக் கதிர்களுடைய சூரியனே விளக்காகவும், சிவந்த ஒளியுடைய சக்கரத்தை ஏந்திய திருமால் திருவடிகளில் துன்பக் கடல் நீங்க இந்தச் சொல் மாலையைச் சாத்தினேன் என புற இருள் நீக்க சூரியவிளக்கு ஏற்றுகின்றார்.

அவர் அருளிய பண் சுமந்த
பனுவல்:

**வையம் தகளியா, வார்கடலே நெய்**
**ஆக,**

**வெய்ய கதிரோன் விளக்கு ஆக,**
**–செய்ய**

**சுடர் ஆழியான் அடிக்கே**

**சூட்டினேன்,சொல் மாலை**

**இடர் ஆழி நீங்குகவே என்று.**

உடனே, பூதத்தார் அகஇருள் நீங்க ஒருவிளக்கு ஏற்றுகின்றார்; எப்படி?

அன்பே தகளியாகிய (பக்தியாய்)



## பேயாழ்வார்

ஆர்வமே நெய்யாக (பரபக்தியாய்) உருகும் இனிய என் மனமே திரியாகவும் கொண்டு ஞானவடிவமான ஆன்மா கரையப் பெற்று பரஜ்ஞானம் ஆகிய சுடர் விடும் விளக்கை நாராயணனுக்கு அடியேன் ஏற்றினேன்; ஞானம் அளிக்கும் இத்தமிழ் நூலை இயற்றினேன்.

அவர் அருளிய பண் சுமந்த பனுவல்;

**அன்பே தகளியா, ஆர்வமே நெய் ஆகி**
**இன்ப உருகு சிந்தை இடு திரியா,**
**–நன்பு உருகி**
**ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன்,**
**நாரணற்கு**
**ஞானத் தமிழ் புரிந்த நான்.**

இந்த இரட்டை தீபங்கள் ஜோதியிலே (அகம் புறம் இரண்டின் இருட்டை ஓட்டியதும் சோதியுண்டாகும்) திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் என குதுகலமாய் ஆடுகின்றது பேய். மெய் பொருளாக கண்ட மகிழ்ச்சியிலே ஆனந்த ஆட்டம், அவர் அருளிய பண் சுமந்த பனுவல்:

**திருக்கண்டேன்; பொன்மேனி**
**கண்டேன்; திகழும்**
**அருக்கன் அணிநிறமும் கண்டேன்;**
**–செருக்கிளரும்**
**பொன் ஆழிகண்டேன் புரிசங்கம்**
**கைக் கண்டேன்**
**என் ஆழி வண்ணல்பால், இன்று.**

**முடிவுரை:** ஆம்! அகம் புறம் ஆகிய இரு இருளையும் ஓட்டிவிட்டால் திரு (இலக்குமி) தெரிவாள். அந்தத் திருவே நமக்கு பகவானின் பொன்மேனியைக் காண்பித்துக் கொடுப்பாள்.

இம்மூவரும் கண்ட இறை ஒளியை நாம் காண – நமக்குக் காட்டினார்கள் ஆழ்வார்கள். நாமும் அவர்கள் வழிநின்று இறையருளைப் பெற்று அவனைக் காண்போமாக.

**உளன் கண்டாய்; நன்னெஞ்சே!**
**உத்தமன்என்றும்**
**உளன் கண்டாய்; உள்ளுவார்**
**உள்ளத்து உளன்கண்டாய்**
**வெள்ளத்தின் உள்ளானும்,**
**வேங்கடத்துமேயானும்**
**உள்ளத்தின் உள்ளான் என்று ஓர்.**

பொய்கையார் சிறந்த மெய்ப் பொருளைக் காண பிரிதோர் இடத்தில் எவ்வளவு அருமையாக ஆணித்தரமாய்ப் பேசுகின்றார் பாருங்கள்; உள்ளத்து அவனை உள்ளுதல் (தியானித்தால்) அவன் அருள்கிட்டும் அவனைக் காண்பது உறுதி; திண்ணம் என்பதை 'உளன் கண்டாய்' என நான்கு இடங்களில் பேசுதல் இதற்கு வலிமை சேர்ப்பதாய் உள்ளது.

நாமும் வெள்ளத்து உள்ளானையும் (திருப்பாற்கடல்), வேங்கடத்து உள்ளானையும் உள்ளத்து யாண்டும் உள்ளி (தியானத்து) உய்வடைவோமாக.

# செம்பியன்மாதேவி

## தருமையாதீனப் புலவர்
## தா. குருசாமி தேசிகர்

**ம**ங்கலப் பாண்டி வளநாடு மாத்தமிழ் வளர்த்தது என புகழைப் பெற்றிருப்பினும் சோழ நாட்டிற்கு இணையாகாது. உயிரையும் உணர்வையும் போற்றி வளர்த்துப் புரந்தவர்கள் சோழர்கள். சோழர்கள் சமயம் மாறியவர்கள் அல்லர். புதியனவாகத் தமிழகத்தில் கால் கொண்டிருந்த பௌத்த சமண மதங்களில் வீழாமல் செந்தமிழ் மரபு காத்த செம்மலார் செம்பியர்கள். திராவிடர் பண்பாட்டுக் கருவூலத்தைக் காப்பாற்றிய சோழ வேந்தர்களைத் தமிழக வரலாறு இன்றும் புகழ்ந்து வாழ்த்தி நிற்கிறது.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் – தாழ்த்த சென்னியும் தந்த தலைவனைச் சோழ மரபினர் தலையாரக் கும்பிட்டுத் தளிகள் பல கண்டனர். "சமய குரவரி"ன் பாடல்கள் பெற்ற காவிரித் தலங்கள் அனைத்தும் கற்கோயிலாக எழுப்பிய கதையை வரலாறு வரையறுத்துக் காட்டும். சோழ மன்னர்களில் விசயாலயன் காலம் முதலே கற்றளிகள் கால் கொண்டன என்பர் ஆராய்ச்சியாளர்.


சோழ மன்னர்கள் குடும்பத்தில் **செம்பியன் மாதேவியார்** அனைவராலும் அறியப்பட்டவர். மனைத்தக்க மாண்புடைய இவ்வம்மையார் செந்தமிழும் சிவநெறியும் புரந்து நாட்டையும் மன்னரையும் அக்காலத்தில் நல்வழியில் நிறுத்திய நற்றிறம் இவர்களுக்கே உரியது. 'ஆணுக்குப் பெண் இங்கு இளைப்பில்லை காண்' – என்ற பழமொழிக்குச் செம்பியன்மாதேவியார் சிகரமாய் நிற்கிறார்.

இச்செம்பியன் மாதேவியார் பெயரால் அமைந்த ஊரே இன்று செம்பியன்மாதேவி என்று நாகப்பட்டினத்திற்கு அருகில் விளங்குகிறது. இவ்வூர் சிற்றூர். இது எழிலும் பொழிலும் சூழ்ந்த இயற்கை அன்னை கொலுவீற்றிருக்கும் இடமாகும்.

கண்டராதித்தர் என்பவர் ஒரு சோழ மன்னர். இம்மன்னர் கலைமலிந்த சீர்நம்பியாவார். தேவாரத் திருமுறைகளிடத்துத் தணியாத ஆர்வத்துடன் பயிற்சி உடையவர். பைந்தமிழ் உணர்வு பொங்கி வழிந்த காரணத்தால் பாவலராகவும் திகழ்ந்தார். இவர் பாக்கள் திருவிசைப்பாத் தொகுப்பில் உள்ளன.

கண்டராதித்தர் முதல் பராந்தகரின் இரண்டாவது திருமகனாவார். இவர் காலம் கி.பி.**949–957** என்று வரையறுப்பர். இக்கண்டராதித்தர் ஆட்சி புரிவதைக் காட்டிலும், தல யாத்திரை செய்து அடியார்க் கடியாராக விளங்குவதையே தொழிலாகக் கொண்டார். இவர்க்கு இல்லக்கிழத்தியாராக அமைந்தவர் தான் செம்பியன் மாதேவியார்.

கணவன் கருத்தினைத் தெரிந்து அவர்க்குத் துணை நின்று கருத்தொருமித்த வாழ்வு நடத்திய வளமையினை வரலாறு வாழ்த்துகிறது. சிவநெறியை உயிரெனப் பற்றிய சோழர்கள் தேவாரத் திருமுறைகளைப் போற்றுவதும், புதிய



கற்றளிகள் சமைப்பதும் ஆகிய நெறிகளில் முன்னின்று ஆட்சிச் சக்கரத்தையும் ஒருங்கே ஒழுங்காகச் செலுத்தினர். விசயாலயன் காலம் முதல் கோயில் வளர்ந்தும் கட்டிடம் இல்லாத குறையினை ஒவ்வொரு மன்னரும் போக்குவதற்குத் திட்டம் இட்டு தத்தம் வாணாளில் சில பல கோயில்களைக் கட்டி முடித்தனர். அவை தனி ஆய்விற்குரியன.

கோயில் எழுப்புகின்ற இடம் ஆற்றோரம், கடலோரம், இயற்கைச் சூழலாக விளங்கும் பிற இடங்களிலும் அமைப்புடையதாக இருந்தது. சில, குன்றுகளின் உச்சியிலும் ஏரிக்கரைகளிலும் யாறுகள் கூடுமிடங்களிலும் கோயில்கள் கண்டனர்.

இயற்கை எழில் மிக்க இடங்கள் அனைத்திலும் பண்டைத் தமிழ் மக்கள் கடவுள் தன்மையைக் கண்டனர். கோயில்களில் சில மன்னர் மட்டுமின்றி, தனிப்பட்ட செல்வர்களாலும், கடவுள் பற்றுமிக்க ஒப்புரவாளர்களாலும் எடுக்கப் பட்டன. கோயில்கள் எவ்வரசர்களின் ஆதரவால் அமைக்கப்பட்டனவோ அவர்கள் பெயரால் விளங்குகின்றன. இவ்வாறு விளங்குவதே செம்பியன் மாதேவி கைலாசநாதர் கோயிலாகும்.

செம்பியன் மாதேவி அம்மையார் பழையாறையில் நெடுநாள் வாழ்ந்து கண்டராதித்தரோடு இருந்தோம்பி இல்வாழ்ந்தவர். சுந்தர சோழன், முதல் இராசராசன், முதல் இராசேந்திரன் கால ஆட்சி வரை வாழ்ந்து மன்னர்களை வளர்த்து ஒழுகலாறு ஊட்டிய ஒள்ளிழையார் செம்பியன் மாதேவியார். இத்தேவியார் கண்டராதித்தரோடு சில ஆண்டுகளே வாழ்ந்தவர், மதுராந்தக உத்தம சோழன் என்ற ஒரே திருமகனைப் பெற்றெடுத்தவர்.

முதல்பராந்தகன் மகனான இராசகேசரி கண்டராதித்தர், தக்கோலப் போரில் இராசாதித்தன் இறந்த பின்பு அரியணை ஏறியவர். இவர் கொள்ளிடத்தின் வடகரையில் தன் பெயரால் ஊர் அமைத்துள்ளார். சிறந்த கல்வியும் நிறைந்த பக்தியும் உடையவர், மேற்கெழுந்தருளினதேவர் என்று கண்டராதித்தர் பற்றிக் கல்வெட்டு கூறுகிறது.

மழவராயர் குலத்தவராம் கண்டராதித்தர் தேவியும், மதுராந்தகன் தாயுமான பராந்தகன் மாதேவடிகள் என்ற செம்பியன் மாதேவி இளமையிலேயே கைம்பெண் ஆனதால் தாபத நிலையில் ஏறத்தாழ 30 ஆண்டுகள் வாழ்ந்து சிவனடி மறவாத சிந்தையராய், தன் ஆற்றலையும் செல்வத்தையும் புதுக் கோயில்கள் எழுப்புவதிலும் பழைய கோயில்களைப் புதுக்குவதிலும், கோயில்களுக்குரிய நன்கொடைகளையும், மானியங்களையும் மிகுப்பதிலும் தன்

வாழ்நாட்களைச் செலவிட்டிருக்கிறார். தன் பெயரால் செம்பியன் மாதேவியூர் கண்டிருக்கிறார் இவ்வம்மையார். இவ்வம்மையார் திருவக்கரைக் கோயில் கட்டிய செய்தி, முதல் இராசராசனுடைய 16ஆம் ஆண்டுக் கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது.

செம்பியன்மாதேவியாருடைய ஈடுபாடும் பக்தியும் அரச குடும்ப முழுவதும் பரவிடவே அவர் புதல்வர் மதுராந்தகனும், அவருடைய தேவிமார் பலரும் அரசியல் அதிகாரிகள் பலரும் இறை திருப்பணிகளில் ஈடுபடுபவராயினர். முற்பட்ட சோழர்கள் காலத்து அரச குடும்பத்தைச் சார்ந்த பெண்களாகிய மலர்க்குவியல்கள் இடையே செம்பியன் மாதேவியார் தாமரையாகக் காட்சி வழங்குகின்றார் – என்று வரலாற்றாசிரியர், திரு. பாலசுப்ரமணியம் கூறுவது நினைத்தற்குரியது.

கோனேரிராசபுரம் என்று வழங்கும் 'திருநல்லம்' அப்பர் தேவாரம் பெற்ற ஊர். அவ்வூர்க் கோயிலை நமது செம்பியன் மாதேவியார் தன் கணவர் பெயரால் எடுப்பித்திருக்கிறார்.

மூலத்தானத்தின் தென்சுவரில் இலிங்கத்தை வழிபட்டுக் கொண்டிருக்கும் கண்டராதித்தர், அவர் பின் நிற்கும் செம்பியன்மாதேவியார், சிலைகளின் கீழே கல்வெட்டு காணப்படுகின்றன. இக்கல்வெட்டு கீழ்வருமாறு:–

–"ஸ்வஸ்தி ஸ்ரீ கண்டராதித்த தேவர் தேவியார் மாதேவடிகளார் ஸ்ரீசெம்பியன் மாதேவியார் தம்முடைய திருமகனார் ஸ்ரீமதுராந்தகத் தேவரான ஸ்ரீஉத்தம சோழன் திருராச்சியம் செய்தருளா நிற்கத் தம்முடையார் ஸ்ரீ கண்டராதித்த தேவர் திருநாமத்தால் திருநல்லம் உடையார்க்குத் திருக்கற்றளி எழுந்தருளுவித்து இத்திருக்கற்றளி யிலேயே திரு நல்லம் உடையாரைத் திருவடி தொழுகின்றவராக எழுந்தருளிவித்த ஸ்ரீ கண்டராதித்த தேவர் இவர் –" இக்கல்வெட்டு மூலமாக நாம் அறிகின்ற செய்தியை இன்று நேரடியாகக் காணலாம். இங்கு செம்பியன் மாதேவியார் உருவம் உள்ளது கண்டு மகிழ்தற்குரியது.

இக்கோயிலின் பல கல்வெட்டுக்களில் ஒன்று, முதல் இராசேந்திரனுடைய அத்தை குந்தவை பிராட்டியார் வழங்கிய நன்கொடை சொல்லப்படுகிறது. இவ்வம்மையார் செம்பியன் மாதேவியார்க்கு அடுத்துக் கோயில்கள் அமைத்தல், திருப்பணி செய்தல், மானியம் வழங்கல் முதலிய நற்செயல்களில் ஈடுபட்ட உத்தமியாவர்.

நாகையிலிருந்து 12 கல் தொலைவில் உள்ள செம்பியன் மாதேவியூர், உத்தமசோழனுடைய 12, 13 ஆம் ஆண்டுகளில் அமைக்கப்பட்டது. இவ்வேந்தனுடைய ஆட்சிக் காலத்தில் அந்தணர் பலரைக் குடியேற்றினார் செம்பியன் மாதேவியார். இவர் எழுப்பிய கோயிலில் பல கல்வெட்டுக்கள் மூலமாக இவரே பாராட்டப்படுகின்றார்.

இக்கோயில் கட்டளைகளும், அறநிலைய நிர்வாகமும் 'சதுர்வேதிப் பட்டதானப்' பெருமக்களின் நிர்வாகத்தில் இருந்து வந்தன – என்பதைக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. தேவியாரின் செப்புச்சிலை இங்கு இருந்திருக்க வேண்டும்; இதுபற்றி முதல் இராசேந்திரன் 8ஆம் ஆண்டுக் கல்வெட்டு கூறுகின்றது.

இவ்வூர் செம்பியன் மாதேவியின் பெருமைக்குரிய சின்னமாகும்! காலவெள்ளத்தில் அகப்பட்டு அழிந்துவிடாமல் இன்னும் பழம் பெருமையோடு விளங்குகின்ற இத்திருவூர் கொஞ்சம் கூட மக்கள் வழக்கில் சிதைவு இல்லாமல் 'செம்பியன்மாதேவி' என்று வழங்கப்படுவது அதிசயித்தக்கது. காடு கெடுத்து நாடாக்கிக் குளந்தொட்டு வளம் பெருக்கிய சோழர்கள் பல ஊர்களைக் கண்டனர்.

அவற்றுள் திருப்புகலூர்க் கோயிலிலும் செம்பியன் மாதேவி உருவமும் பணியும் காணலாம்.

'செம்பியன் மாதேவி' என்னும் ஊர் ஒரு பெண்ணின் நல்லாருடைய ஒப்புரவையும், தனி நாகரிகத் தன்மையையும் வெளிப்படுத்துவதாகும்.

இத்திருக்கோயிலில் உள்ள 'அந்தராளம்' மண்டபம் – புதிய பாணியை

உடையது – இருதளக்கற்றளி உருண்டையான கிரீவமும் சிகரமும் உடையது.

இவ்வூரில் உள்ள கயிலாசநாதர் கோயில் தஞ்சை இராசராசேச்சுரத்திற்கு முன்னோடியாகும் – அதன் நுட்பம் ஒத்துப் பார்ப்பவருக்கே விளங்கும்! செம்பியன்மாதேவி செல்பவர்கள் செம்பியன் மாதேவியாரைத் தவறாது கண்டு வருதல் வேண்டும்! அவ்வம்மையார் அமைத்த திருக்குளம் அவர் உள்ளம் போல் இனிக்கிறது. அவர் செல்வமும் ஊருணி நீர் நிறைந்தது போன்றுதான்!

வாழ்க செம்பியன் மாதேவியார்!

# மாரடைப்பைத் தடுக்க தியானம்

## இதய நிபுணர் டாக்டர் வி.சொக்கலிங்கம்



**மா**ரடைப்பு வராமல் தடுத்து இதயத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள மனிதனுக்கு மன அமைதி மிகவும் அவசியம்.

பெரும்பாலும் ஆண்களே மாரடைப்பு நோயால் அதிக அளவு பாதிக்கப்பட்டு வந்தனர். இப்போது பெண்களும், இளம் வயதினரும் அதிக அளவு மாரடைப்புக்கு ஆளாகிறார்கள். மாரடைப்பு ஏற்படுவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் முக்கியமானது மன உளைச்சல் ஆகும்.

அதிக அளவிலான மன உளைச்சலே இறுதியில் மாரடைப்பில் சென்று விட்டு விடுகிறது. குறிப்பாக, இளம் வயதினரே அதிகமாக மன உளைச்சலுக்கு ஆளாகிறார்கள். இதற்கு முக்கியக் காரணமாக கூறப்படுவது வேலைப்பளு. செய்யும் தொழிலைப் பளுவாக என்றுமே கருதக் கூடாது.

நமது இதயம் ஒரு நாளில் சாதாரணமாக ஒரு லட்சம் முறை துடிக்கிறது. அதிகப்படியான கோபம், கவலை உள்ளிட்ட சில காரணங்களால் இதயம் இன்னும் கூடுதலாகத் துடிக்கிறது. அப்போது அதிகப்படியான ரத்த அழுத்தம் ஏற்பட்டு மாரடைப்பு ஏற்படுகிறது.

எனவே இவற்றைத் தவிர்க்க வேண்டும். மேலும் உணவில் கொழுப்புச் சத்து அதிகப்படியாக சேர்வதைத் தவிர்க்க வேண்டும். துரித உணவகத்தில் மட்டுமே சாப்பிடும் பழக்கம் இளைஞர்களிடத்தில் அதிகமாகக் காணப்படுகிறது. அந்த உணவுகளில் சேர்க்கப்படும் தரமில்லாத எண்ணெய் இதயத்தில் சீரான ரத்தப் போக்கைத் தடை செய்கிறது. எனவே உணவுக் கட்டுப்பாடு மிகவும் அவசியம்.

தியானம், யோகாசனம் ஆகியவற்றை முறையாக செய்வதன் மூலம் மனதில் அமைதியை நிலைப்படுத்த வேண்டும். மன நிம்மதி, மன அமைதி ஆகியவையே மாரடைப்பைத் தடுக்கும் மகத்தான மருந்து ஆகும்.

**நன்றி: தினமணி**
**28.09.10**

# அய்யா வைகுண்டர்

பொன்.தெ.தர்மராஜன்

வியப்புக்குரியவன், எல்லா உயிர்களுக்கும் தகப்பன், தலைவன், இறைவன் என்ற பொருள் தரும் சொல் 'அய்யா'.

அய்யா என்ற சொல் பொதுவாகக் கடவுள் என்று பொருள் தந்தாலும், குறிப்பாகத் திருமாலையும், அவரின் அவதாரமாக வந்த வைகுண்டரையும் குறிக்கிறது.

அய்யா வைகுண்டர் கோயில் தென் தமிழ் நாட்டிலும், தென் கேரளாவிலும் ஏராளமாக உள்ளன. அய்யாவை வழிபடும் மக்கள் அன்புக் கொடி மக்கள் என்றும் அய்யா வழியினர் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

தமிழ் நாட்டிலும் கேரளாவிலும் அய்யாவை பல லட்சம் மக்கள் தெய்வமாக வழிபடுகின்றனர். அய்யாவை வழிபடு தெய்வமாகக் கொண்ட கோயில்கள் தென்னாட்டில் ஆயிரக்கணக்காக உள்ளன. சென்னையில் மூன்று பெரிய கோயில்களும், இருபதுக்கு மேற்பட்ட சிறிய கோயில்களும் உள்ளன.

அய்யாவின் சிறிய கோயில்கள் நிழல் தாங்கல்கள் என்றும், பெரிய கோயில்கள் பதிகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

அய்யா வழியினர் நெற்றியில் தீப வடிவில் வெள்ளைத் திருமண் (நாமம்) அணிந்தும், தலையில் தலைப்பாகை அணிந்தும் அய்யாவை வழிபடுகின்றனர்.

அய்யாவின் வரலாறு பற்றி இப்பொழுது காண்போம். அய்யா வைகுண்டர் குமரி மாவட்டம் சுசீந்திரத்திற்கு அருகில் உள்ள தாமரைக்குளம் என்ற ஊரில் தோன்றினார்.

19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வெள்ளையர் காலத்தில் கன்னியாகுமரி மாவட்டம் திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு உட்பட்டிருந்தது.

திருவாங்கூர் மாநிலம் சாதிக் கொடுமைகளின் உச்சநிலைப் பூமியாக இருந்தது. அம்மாநிலத்தில் பயணம் செய்த சுவாமி விவேகானந்தர், 'பைத்தியக்காரர்களின் கூடாரம்' என்றார்.

அரச குடும்பத்தினர், அதிகாரிகள், படை அதிகாரிகள், ஆலயக் குருக்கள் ஆகியோர் மேல்தட்டு மக்களாகக் கருதப்பட்டனர். மற்ற சுமார் 18 சாதி மக்கள் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட, மக்களாக ஒதுக்கப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டனர்.

மேல்தட்டு மக்கள் தங்கள் சௌகரியங்கள், சுகபோகங்களை உருவாக்கித் தர வேண்டிய அடிமைகளாகவே கீழ்த்தட்டு மக்களை நடத்தினர். கீழ்த்தட்டு மக்களின் நலன்கள் மொத்தமாகப் புறக்கணிக்கப்பட்டன.

அந்த மக்களின் மீது கொடுமையான வரிகள் விதிக்கப்பட்டன. அவர்களுக்கு பொன், வெள்ளி நகைகள் அணிய உரிமை இல்லை; நன்செய் நிலங்களை உரிமை கொள்ள, பசு மாடுகளை வளர்க்க உரிமை இல்லை.

கல் வீடு கட்ட, ஓட்டு வீட்டில் வசிக்க உரிமை இல்லை. ஆண்களும், பெண்களும் கால் கரண்டைக்கு கீழும், இடுப்புக்கு மேலும் ஆடை அணிய உரிமை இல்லை. ஆம்! திருவாங்கூர் மாநில மக்களுக்கு ஆணாயினும், பெண்ணாயினும் தாங்கள் மார்பை மூடிக் கொள்ள உரிமை இல்லை. இவை போன்ற கொடுமைகளைப் பட்டியலிட்டுக் கொண்டே சென்றால் நம் கட்டுரை மிக நீளும்.

இந்நிலையில், தாமரைக்குளம் ஊருக்கு அருகில் உள்ள சாஸ்தான்கோயில்விளை என்ற ஊரில் பொன்மாடன் – வெயிலாள் என்ற தம்பதியினருக்கு இரண்டாவது மகனாக கி.பி.1809 ஆம் ஆண்டு ஒரு ஆண் குழந்தை பிறந்தது.

அக்குழந்தைக்கு 'முடிசூடும் பெருமாள்' என்று பெயரிட்டனர். அக்காலத்தில் அப்பகுதியில் அரச மரபினர் மட்டுமே 'பெருமாள்' என பெயரிட்டுக் கொள்ளும் வழக்கம் இருந்தது. பொன்னுமாடன் தன் பிள்ளைக்கு 'முடிசூடும் பெருமாள்' எனப் பெயரிட்டதற்கு மேட்டுக்குடியினரின்எதிர்ப்பு கடுமையாக இருந்ததால் அவருக்கு 'முத்துக்குட்டி' எனப் பெயர் மாற்றினர்.

முத்துக்குட்டி அழகோடும், அறிவோடும் வளர்ந்தார்.

அக்கால வாய்ப்புப்படி திண்ணைப் பள்ளிக்கூட கல்வி கற்றார். இதனை அருள்நூல்

**"அண்ணாவி திருவம்பலம்**
**அருள் கொண்டு கரை சேர்ந்தேன் சிவனே அய்யா"**

என்று கூறுகிறது.

முடிசூடும் பெருமாளின் குடும்பத்தினர் வைணவ வழிபாட்டில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதை அவர்களது குடும்ப உறுப்பினர்களின் பெயர்களைக் கொண்டு அறிய முடிகிறது. மேலும் அவர்கள் சிவ வழிபாடும் உடையவர்களாக இருந்தார்கள். அப்பகுதியில் அக்காலத்தில் கிறித்தவமும் பரவி இருந்தது.


முடிசூடும் பெருமாள் தன்னைச் சூழ்ந்து

வாழ்ந்த மக்களின் ஏழ்மை நிலையையும், அடிமைத்தனத்தையும் கண்டு மிகவும் வாடினார்.

வயது வளர வளர ஆன்மிகச் செய்திகளை அறிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். தாமரைக்குளம் ஊருக்கு அருகில் மருந்து வாழ்மலை என்னும் மலை இருக்கிறது.

அம்மலையில் அக்காலத்தில் அநேக சன்னியாசிகள் தங்கி தவம் செய்தார்கள். பல சித்தர்கள், ஞானிகள் இருந்தார்கள். முடிசூடும் பெருமாள் ஆன்மிகத் தொடர்புடையவர்களை அணுகித் தன் ஞானத்தைப் பெருக்கிக் கொண்டார்.

முடிசூடும் பெருமாளுக்கு ஒரு அத்தை இருந்தார். அவருக்கு காக்காச்சிவிளை என்ற ஊரில் திருமணம் ஆகியிருந்தது. அவருக்கு திருமாலம்மை என்ற மகள் இருந்தார். அவருக்கு ஊரான்மொழி என்ற ஊரில் திருமணம் ஆகி இருந்தது. நோயுற்ற அவர் இரண்டு குழந்தைகளுடன் தன் பாட்டி வீடான வெயிலாள் அம்மை வீட்டிற்கு வந்தார். அப்பொழுது முடிசூடும் பெருமாளுக்கு 17 வயது. ஆதரவற்று



வந்த அவரையும், குழந்தையையும் முடிசூடும் பெருமாள் ஆதரித்துக் காத்தார்.

தன்னைச் சூழ்ந்து வாழ்ந்த மக்களின் துன்பநிலை அவரை மிகவும் வருத்தியது. ஏழை மக்களின் துன்ப நிலையைப் போக்கி அவர்கள் நிலையை உயரச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவருள் ஏக்கமாக இருந்தது.

**'தாழக் கிடப்பாரைத் தற்காப்பதே தர்மம்' என்ற கொள்கை கொண்டார்.**

திருமாலுக்கு பீடம் அமைத்து அனுதினமும் வணங்கினார். இதனை அய்யா தந்துள்ள அகிலத்திரட்டு நூல்

**'விஷ்ணுவைக் கும்பிட்டு**
**விளங்க ஒரு பீடமிட்டு'**

என்று கூறுகிறது என்றாலும் வைணவ, சைவ தத்துவங்கள் அவர் நெஞ்சில் மிகவும் நிறைந்தன.

வாலிபப் பருவம் வந்தது முதல் தன்னைச் சார்ந்த மக்களுக்காகப் பாடுபடுவதில், அவர்களுக்காக வாதாடுவதில் ஈடுபட்டார். அந்த ஊர் மக்களின் மதிப்புக்குரியவராய் செல்ல மகனாய் ஆனார்.

அவருடைய பெயர் அக்கம்பக்கத்தில் உள்ள கிராமங்களில் பரவியது. மேல்தட்டு மக்களிடம் ஏழை மக்களுக்காக அவர் பாடுபடுவது, வாதாடுவது வெறுப்பை உண்டாக்கியது. அவர் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டனர். இறுதியாக அவரைக் கொன்று விடத் தீர்மானித்தனர். அப்பொழுது அவர் வயது 22.

மருந்துவாழ் மலையில் இருந்த பரமார்த்த லிங்கேஸ்வரர் கோயிலில் ஆதிக்க சக்திக்காரர்களாய் இருந்த உயர் சாதியினர் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்தார்கள். அந்த விருந்துக்கு முடிசூடும் பெருமாளையும் அழைத்தார்கள். மெதுவாகக் கொல்லும் நஞ்சை (Slow Poison) அவர் உணவில் கலந்து அவருக்குப் பரிமாறினார்கள். அறியாது அவர் உண்டார்.

சிறிது காலத்தில் முடிசூடும் பெருமாள் உடலில் ஒருவகையான தோல் நோய் உண்டானது. நாளுக்கு நாள் நோய் முற்றியது. அவருடைய தாயார் வெயிலாள் அம்மையும் உறவினர்களும் மிகவும் முயன்று பலவிதமான வைத்தியங்களும் செய்தார்கள். சுகம் கிடைக்காமல் நடமாட முடியாது படுக்கையில் விழுந்தார். மருத்துவர்கள் இனி குணப்படுத்த முடியாது எனக் கைவிட்டார்கள்.

வைத்தியர்கள் கைவிரித்து விட அய்யா படுக்கையில் விழுந்ததும் வெயிலாள் அம்மை திக்கற்று திகைத்து நின்றார்.

'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை' என்ற நிலையில் அம்மை தெய்வத்தையே வேண்டியே இருக்க, ஒரு நாள் அம்மையின் கனவில் திருமால் கரிய நிற மனிதராக வந்தார். அவர் "கொல்லம் **1008ஆம்** ஆண்டு மாசித் திங்கள் **19ஆம்** நாள் **(கி.பி.1833)** திருச்செந்தூரில் கொடியேற்றி திருவிழா தொடங்குகிறது. உன் மகனை அங்கு அழைத்து வா. அதற்கு மேல் நடப்பு எல்லாம் நலமாகச் செய்வோம் நாம்" என்றார்.

வெயிலாள் அம்மை உறவினர்களைச் சேர்த்து, உணவு சேகரித்து திருச்செந்தூர் புறப்பட்டார். தொட்டில் கட்டி அதில் முடிசூடும் பெருமாளைப் படுக்க வைத்து தூக்கிச் சென்றார்கள். பாறைகள் நிறைந்த நிலப்பகுதி வழியாகவும், காட்டு வழியாகவும் அய்யாவைத் தூக்கிச் சென்றார்கள்.

உவரி என்ற ஊருக்கு அருகில் நிழல் நீருடைய ஓரிடத்தில் தங்கி உணவு உண்டார்கள். ஓய்வு எடுத்தார்கள். அப்பொழுது ஒரு அதிசயம் நிகழ்ந்தது. திடீரென முடிசூடும் பெருமாள் (அய்யா) எழுந்து வேகமாக நடக்கத் தொடங்கினார். இதனைக் கலைமுனி, ஞானமுனி என்ற இரு முனிவர்கள் அரூவமாக வந்து தோள் கொடுத்து அவரைத் தூக்கிச் சென்றார்கள் என 'அகிலத்திரட்டு' கூறுகிறது.

உறவினர்கள் பின் தொடர்ந்து சென்றார்கள்.

திருச்செந்தூர் சேர்ந்து கடலில் நீராடச் சென்றார்கள். அப்பொழுது ஒரு அலை அய்யாவை கடலுக்குள் இழுத்துச் சென்றது.

உறவினர்கள் அழுதார்கள்; புலம்பினார்கள்; தேடினார்கள். பின்னர் நம்பிக்கை இழந்து ஊர் திரும்பினார்கள். பெற்றதாய் வெயிலாள் அம்மை மட்டும் அழுது புலம்பியபடி அங்கேயே இருந்தார்.

இதன் பின் நிகழ்வுகளை 'அகிலத் திரட்டு' பின் வருமாறு விவரிக்கிறது.

'திருமால், சிவன், அன்னை உமையாள், லட்சுமி முதலானோர் திருச்செந்தூர் கடற்கரையில் கூடினார்கள். அன்னை மகாலட்சுமி ஒரு மகர (மீன்) வடிவாகி கடலுக்குள் சென்றார். திருமால் அக்னி வடிவாய் கடலுக்குள் சென்றார். மகாலட்சுமியை அணுகினார். கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்ட முடிசூடும் பெருமாளின் சடலம் அங்கு கொண்டு வரப்பட்டது. அதைத் தன் வைகுண்டக் குழந்தையாக்கி திருமால் உபதேசங்கள் செய்தார்' என்பது அகிலத்திரட்டின் கூற்று.

இதனை மாற்றிப் பிறத்தல்; அதாவது மனித நிலையில் இருக்கும் மனிதனின் மனம் முற்றிலும் தெய்வ நிலைக்கு மாறி விடுவது. இப்படிப் பல விளக்கங்களைப் பெரியோர்கள் கூறுகிறார்கள்.

ஆக திருமாலின் மகவாக அய்யா வைகுண்டர் பிறந்தார். அவருக்குத் திருமால், ஞான உபதேசம் செய்தார். இதனை 'விஞ்சை' என்கிறது அகிலத்திரட்டு. விஞ்சை விவரம் அகிலத்திரட்டில் உள்ளது.

இவ்வாறு கொல்லம் 1008 வருடம், மாசி மாதம் 18ம் தேதி வெள்ளிக் கிழமை கடலுக்குள் சென்ற முடிசூடும் பெருமாள் ஞானஉபதேசம் பெற்று மூன்றாம் நாள் ஞாயிற்றுக் கிழமை கடலுக்கு வெளியே வந்தார். அங்கே அன்னை வெயிலாள் காத்துக் கொண்டிருந்தார்.

அன்னை வெயிலாளைக் கடலுக்குள் பார்க்கச் சொன்னார். அங்கே மாட மாளிகைகள் தெரிந்தன.

பின்னர் தன் சொந்த ஊர் நோக்கி பயணிக்கத் தொடங்கினார். அப்பொழுது அவர் ஒரு பைத்தியக்காரனைப் போலவும், பிச்சைக்காரனைப் போலவும் காட்சி அளித்தார்.

அனைவரின் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளானார். உடன்குடி, நடுவக்குறிச்சி இப்படிப் பல ஊர்களைக் கடந்து சுசீந்திரத்திற்கு அருகில் உள்ள தன் சொந்த ஊரான தாமரைக் குளத்திற்கு வந்தார். அவருடன் அவர் தாயார் வந்தாரா? இல்லையா? என்பது தெரியவில்லை.

அங்கு திருவாங்கூர் சமஸ்தானத்தில் பணியாற்றிய பூவண்டர் என்ற யாதவர்க்குச் சொந்தமான தோப்பு ஒன்றிருந்தது. அங்கு அய்யா வைகுண்டர் தங்கி கடுமையான தவம் செய்யத் தொடங்கினார்.

ஒருவேளை மட்டும் உணவு உண்டும், இருந்த இடம் விட்டு அசையாமலும், பூமியில் புதைந்திருந்தும் பலவாறாக கடுமையான தவம் செய்தார்.

முதலில் இவருக்குப் புத்தி பேதலித்து விட்டது; பைத்தியமாகி விட்டார் என்று பேசிய மக்கள் சில ஆண்டுகளுக்குப் பின்னர் இவரை நாடி வரத் தொடங்கினார்கள். நாளுக்கு நாள் அய்யாவைத் தேடி வரும் மக்கள் கூட்டம் அதிகரித்தது.

தங்கள் நோய் தீர வேண்டியும், வறுமை ஒழியவும், பிள்ளைச் செல்வம் வேண்டியும் மக்கள் கூட்டம் கூடியது.

தன்னை நாடி வந்த மக்களுக்குத் தண்ணீரில் மண்ணைக் கலந்து, கொடுத்தார்.

பேய் பிடித்தவர்களை விட்டு பேய் விலகியது; மனநோயுற்றவர்கள், புத்தி பேதலித்தவர்கள் நலம் பெற்றார்கள்; அநேகரின் வறுமை நீங்கியது; நோய்களும் நீங்கின. அய்யாவை வணங்கி 54 வயது பெண் கூட பிள்ளை பெற்றாள் என அகிலத் திரட்டு கூறுகிறது.

அய்யாவைத் தேடி எல்லா சாதி மக்களும் வந்தார்கள். அங்கு ஒரு கிணற்றைத் தோண்டி எல்லா இன மக்களும் ஒன்று சேர்ந்து குளித்து, வழிபாடு நடத்த ஏற்பாடு செய்தார். அனைவரும் ஒன்றாக அமர்ந்து சமபந்தி உணவு உண்டார்கள். "அனைவரும் சமம்; ஒருவருக்கொருவர் அன்பு கொண்டு வாழ வேண்டும்; நேர்மையான வாழ்வே நல்வாழ்வு," எனப் போதித்தார்.

அய்யா வாழ்ந்த பகுதி திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு உட்பட்டிருந்தது. திருவாங்கூர் மன்னர்கள் வெள்ளையர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு ஆண்டு கொண்டிருந்தார்கள். வெள்ளைய கிறிஸ்துவ குருமார்கள் கிறித்துவ மதத்தை வேகமாக பரப்பிக் கொண்டிருந்தார்கள். கிறிஸ்துவத்தில் சேர்வதால் பாதுகாப்பும், பல நலன்களும் கிடைப்பதை அறிந்து ஏராளமான ஏழை மக்கள் கிறித்துவ மதத்திற்கு மாறிக் கொண்டிருந்தார்கள். ஊர்கள் தோறும் தேவாலயங்கள் தோன்றிக் கொண்டிருந்தன.

அய்யாவின் எழுச்சி இந்து மதத்தின் மலர்ச்சியாக இருந்தது.

அய்யா போதித்த சமத்துவ, நியாய போதனைகள் ஆதிக்க சக்திகளான சில மேல் சாதியினரிடம் வெறுப்பை உண்டாக்கியது.

பெரும் மக்கள் கூட்டத்தைக் கூட்டி அய்யா, தம்மை எதிர்த்து விடுவாரோ என்றும் அஞ்சினார்கள்.

ஆனால், அய்யாவோ அவர்களுக்கு எதிராக ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. தம் மக்களை மேம்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு அறிவுரைகளைக் கூறிக் கொண்டிருந்தார். தைரியமும், தன்னம்பிக்கையும் ஊட்டினார்கள்.

**'தாழக்கிடப்பாரைத் தற்காப்பதே தர்மம்'** என்பது அவரது தாரக மந்திரமாக இருந்தது.

சாதி வெறியும், ஆதிக்க நோக்கும் கொண்டவர் பலவிதமாக அய்யாவைப் பற்றி திருவாங்கூர் மன்னனிடம் கெடுத்து உரைத்தார்கள். 'அவர் புரட்சிக்காரர்; ஆட்சியைக் கவிழ்த்து விடுவார்' என்றும் கூறினார்கள்.

இதையெல்லாம் நம்பிய மன்னர் சுசீந்திரம் வந்து தங்கி, அய்யாவைக் கைது செய்ய படைகளை அனுப்பினான்.

அய்யா மக்களின் மனநிலையை அறிய விரும்பினார். அச்சம் கொண்டவர் போல் ஓடினார். மக்கள் அவரைப் பழித்தும், புகழ்ந்தும் பேசினார்கள். அவர் மீண்டும் கடலுக்குள் சென்று திருமாலிடம் உபதேசம் பெற்றுத் திரும்பியதாக அகிலத் திரட்டு கூறுகிறது.

சிலநாள் கழித்து அரசனின் படைகள் மீண்டும் அய்யாவைக் கைது செய்ய வந்தன. அய்யாவின் ஆதரவாளர்கள் படைகளை எதிர்க்க ஆயுதம் தூக்கினார்கள். அய்யா அவர்களை அடக்கி அமைதிப்படுத்தி விட்டார்.

படைவீரர்கள் அவரைக் கயிற்றால் கட்டி அடித்தும், உதைத்தும், வைதும் அரசனிடம் கொண்டு சென்றனர்.

அரசன் அவரிடம் பல கேள்விகளைக் கேட்க அவர் பதில் கூறவில்லை. நஞ்சிட்ட சாராயத்தைக் குடிக்கச் செய்தார்கள்; குடித்தார். விஷம் அவரைத் ஒன்றும் செய்யவில்லை. பலவித கொடிய தண்டனைகளைக் கொடுத்து அவரைக் கொல்ல முயன்றார்கள். கொல்ல முடியவில்லை. அவரைத் திருவனந்த புரத்திற்கு அழைத்து வரும்படியாக ஆணையிட்டு அரசன் சென்று விட்டான்.

அவரைக் கட்டி இழுத்து கால்நடையாக இட்டுச் சென்று திருவனந்தபுரத்தில் சிறை வைத்தார்கள்.

அரசன் வேங்கைப் புலியொன்றைப் பிடித்து வருமாறு ஆணையிட்டான். புலியைப் பிடித்து வந்தார்கள். புலியை ஒரு கூண்டில் அடைத்து பட்டினி போட்டு வைத்தார்கள். அய்யாவைப் புலிக்கு இரையாகப் போட நாள் குறிக்கப்பட்டது. அய்யாவைச் சூழ்ந்து வந்த மக்கள் அழுது புலம்பினார்கள். அய்யாவோ மௌனித்தார்.

குறிப்பிட்ட நாள் வந்தது. அய்யாவை ஒரு கூண்டில் அடைத்து அதனுள் புலியை அனுப்பினார்கள். புலியோ அய்யாவின் காலடியில் படுத்துக் கொண்டது. காவலன் ஈட்டியின் தலைப்பாகத்தால் பலமுறை புலியைக் குத்தி உசுப்பினான். புலி அந்த ஈட்டியைப் பிடித்து இழுத்து விட்டது. ஈட்டியின் முனை அருகில் நின்ற வேதியனைக் குத்தி அவன் விழுந்து இறந்தான். வேதியனின் சாவுக்கு காரணமாகி விட்டோம் என மனம் வருந்தியும், இவரிடம் ஏதோ மகத்துவம் உள்ளது என்று எண்ணியும் அய்யாவை விடுதலை செய்தான்.

அய்யாவின் மக்கள் அய்யாவைச் சுமந்து சொந்த ஊர் வந்தார்கள். அய்யா தன் தவத்தைத் தொடர்ந்தார்.

அய்யா திருக்கல்யாணம் என ஒரு திருநாளை ஏற்பாடு செய்தார். அந்நாளில் பல பெண் தெய்வங்கள் பல பெண்களின் மேல் அருளாக வர, ஒரு நாடக காட்சி போல அவர்களைத் திருமணம் செய்து காட்டினார். இதனால் பல்வேறு தெய்வங்களும் எனக்குள் அடக்கம். நான் ஏக தெய்வம் என உலகிற்கு உணர்த்தினார்கள்.

அய்யாவுக்கு பஞ்ச பாண்டவர்கள் என ஐந்து சீடர்கள் இருந்தார்கள். அவர்கள் ஊர்தோறும் சென்று அய்யாவின் கருத்துக்களைப் பரப்பினார்கள்.

அய்யாவின் அழைப்பினால் 700 குடும்பத்தினர் தங்கள் வீடு, சொத்து, சுகங்களைத் துறந்து அய்யாவிடம் வந்தார்கள். அவர்களுக்கு வாகைப்பதி, முட்டப்பதி என்ற இடங்களில் தவப் பயிற்சி அளித்தார். பின்னர் அவர்கள் வெவ்வேறு ஊர்களுக்குச் சென்று அய்யாவின் கோயில் (தாங்கல்)களை அமைத்து வழிபாடு நடத்தி அய்யாவின் கொள்கைகளைப் பரப்பினார்கள்.

அய்யாவின் சீடர்களில் ஒருவர் அரிகோபாலசீடர். அவரைக் கொண்டு 'அகிலத் திரட்டு' என்ற நூலை எழுதுவித்தார்.

ஏழுயுக வரலாறு, அய்யாவின் வரலாறு, அய்யாவின் போதனைகள், வழிபாட்டு முறைகள் அந்த நூலில் அடங்கியுள்ளன.

அய்யாவின் பல்வேறு வழிபாட்டு மந்திரத் தொகுப்புகள் 'அருள்நூல்' என்னும் நூலாக உள்ளது.

அய்யா தான் இவ்வுலகை விட்டுப் பிரியப் போகும் நாளையும் உணர்த்தினார். அந்நாளில் கி.பி.1851ஆம் ஆண்டு அய்யாவின் உயிர் பிரிந்தது. பூவண்டன் தோப்பில் அய்யா தங்கியதால் அது 'சாமித்தோப்பு' என அழைக்கப் பெற்றது.

அங்கு அய்யாவின் பொன்மேனிக் கூட்டை அடக்கம் செய்து கோவில் கட்டி மக்கள் வணங்கி வருகிறார்கள்.

அய்யா தன் காலத்திலேயே தன் கொள்கைப்படியான அநேக கோயில்களை ஏற்படுத்தினார். அவை **பதிகள்** என்றும் **தாங்கல்கள்** என்றும் அழைக்கப் படுகின்றன. இவ்வாறான கோயில்கள் தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்காக உள்ளன. தற்பொழுது மும்பையில் கூட அய்யாவின் பதிகள் தோன்றியுள்ளன.

**– அய்யா உண்டு**

## தத்துவக் கதை

# பாசமே பரமானந்தம்

டாக்டர் என்.ஸ்ரீதரன்

மகாபாரதப் போர் முடிந்த பிறகு ஒருநாள் அருச்சுனன் நதிக் கரையில் தனியாக உலாவிக் கொண்டிருந்தான். வில் தரிக்காமல் சாதாரண உடையில் அடையாளம் கண்டுபிடிக்க முடியாதபடி இருந்தான். அவன் மனத்தில் கர்வம் மிகுந்திருந்தது. தானே கிருஷ்ண பகவானின் ஒரே தோழன் என்றும், அவருக்கு அதிகபட்சம் நெருக்கமானவன் என்றும் அவன் பெருமிதம் கொண்டிருந்தான்.

எதிர் திசையிலிருந்து ஓர் அந்தணர் வந்து கொண்டிருந்தார். மார்பில் துலங்கிய முப்புரிநூலுக்கு முரண்பாடாக அவரது இடுப்பில் தொங்கியது ஒரு நீண்ட போர்வாள்!

அருச்சுனன் அவரை நிறுத்திக் கேட்டான்; ''தூய அந்தணரே! தங்களது தோற்றப் பொலிவு தேவகுருவே பூமிக்கு இறங்கி வந்துள்ளாரோ என்று பிரமிக்க வைக்கிறது. ஆனால், உங்கள் இடுப்பிலுள்ள வாள் குழப்பம் ஏற்படுத்துகிறது. சாத்துவீகமான தாங்கள் ஏன் கொலை வாளினை அணிந்துள்ளீர்கள்? யாரைக் கொல்ல இந்த ஏற்பாடு?"

அந்தணர் உறுமலுடன் பதிலளித்தார். "ஒருவரா, இருவரா? நாலு பேர் தலையைச் சீவ வேண்டும். அதுதான் அவர்களுக்குச் சரியான தண்டனை."

''தங்களின் கடுங்கோபத்திற்கு ஆளாகியிருக்கும் அந்த துரதிருஷ்டசாலிகள் யாரென நான் தெரிந்து கொள்ளலாமா?" அருச்சுனன் பணிவுடன் வினவினான்.

அந்தணர் மறுக்கவில்லை. ''அவர்கள் பெயரைச் சொல்ல எனக்கென்ன பயம்? முதல் ஆள் – நாரதர். இவர் இருபத்து நாலு மணி நேரமும் டொய்ங்... டொய்ங்குனு தம்புராவை மீட்டி, பாட்டுப் பாடி, பகவானை ஓய்வெடுக்கவோ, தூங்கவோ விடுவதில்லை. அக்கிரமம்," என்று சீற்றத்துடன் கூறியவர், "அடுத்த ஆள் திரௌபதி," என்றார்.

அருச்சுனன் தனக்கேற்பட்ட சிலிர்ப்பை மறைத்துக் கொண்டான். அந்தணர் தொடர்ந்தார்:

''கிருஷ்ண பகவான் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். சமய சந்தர்ப்பம் பார்க்காமல் இந்த திரௌபதி, "ஹரி! என் மானத்தைக் காப்பாற்று," என்று கூப்பாடு போட்டாள். பகவான் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு அவளுக்குப் புடவையை அனுப்பலானார். ஒன்றிரண்டல்ல, நூற்றுக்கணக்கில். அன்று பகவானைப் பட்டினி கிடக்கச் செய்த கொடுமைக்காரி அவள்.

"மூன்றாவது ஆள் பிரகலாதன். இவனைக் கொன்றுவிடும்படி இரணியன் கட்டளையிட்டிருந்தான். இவனைக் காப்பாற்ற பகவான் கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையில் இறங்கி கையில் ஏந்திக் கொண்டார். அடுத்த முறை மதம் பிடித்த யானையின் காலில் பாய்ந்து இவன் மிதிபட்டுச் சாகாதபடி காப்பாற்றினார். கடைசியாக, உலகளாவிய பேருருவம் படைத்த பகவான் இந்த பிரகலாதனுக்காக ஒரு தூணுக்குள் சுருங்கிக் கிடக்க வேண்டியிருந்தது. பகவானை இவன் எவ்வளவு பாடுபடுத்தி விட்டான்!"

அருச்சுனன் பிரமித்துப் போனான். "பிராமண உத்தமரே! நீங்கள் சொல்வது நியாயமாகத்தான் தோன்றுகிறது. நீங்கள் புதிய கோணத்தில் பார்க்கிறீர்கள். மற்றவர்களும் பகவானிடம் பக்தி செலுத்துகிறார்கள். ஆனால், நீங்களோ பகவானிடம் பாசமுடன் இருக்கிறீர்கள். பாசமே பகவானையும் பக்தனையும் இடைவெளி இல்லாமல் இணைக்கிறது. சரி,

மிஞ்சியுள்ள நாலாவது ஆள் யார்?"

"அவனா?" உறுமினார் அந்தணர். ''பாண்டு மகாராஜாவின் மகன்களில் அருச்சுனன் என்று ஒருவன் இருக்கிறானே. அவனைத் தீர்த்துக்கட்ட வேண்டும். மற்ற மூவர் விஷயமும் சிரமம். நாரதரையும், பிரகலாதனையும் நான் வைகுண்டம் போனால்தான் பார்க்க முடியும். பெண் என்பதால் திரௌபதியைக் கொல்வது பெரும் பாவம். ஆனால், அருச்சுனன் பற்றி பிரச்சினை இல்லை. அவன் ஆண். இங்குதான் அஸ்தினாபுரத்தில் வசிக்கிறான். தற்சமயத்திற்கு அவனை மட்டுமாவது கொல்ல வேண்டும்."

''அப்படியா! அருச்சுனன் செய்த குற்றமென்ன?"

"நாரதர், திரௌபதி, பிரகலாதனைவிட இவன் மிகவும் மோசம். இவன் பகவானை அடிமை போல் நினைத்துத் தனது தேர்ப்பாகனாக்கினான். போர் நடந்த பதினெட்டு நாளும் காலை முதல் மாலை வரை தேரை அங்குமிங்குமாக ஓட்டச் செய்து பகவானை அலைக்கழித்தான். ஆயுதங்களால் அவர் திருமேனி புண்படச் செய்தான்.

தன்னைப் பகவானுக்கு நெருக்கமாகக் கருதிக் கொண்டு



'டேய் கிருஷ்ணா!' என்றெல்லாம் மரியாதை இல்லாமல் அழைத்ததாக பகவத் கீதையில் அவனே ஒப்புக் கொண்டுள்ளான். என் பகவானை வாட்டி வதைத்து அவமதித்த அந்த அருச்சுனன் மட்டும் தனியாக ஆயுதமில்லாமல் என் கண்ணில் படட்டும், முடிந்தது அவன் கதை," என்று சொல்லியபடியே அந்தணர் விடுவிடுவென்று அவனைக் கடந்து சென்று விட்டார்.

அருச்சுனன் கண்களில் நீர் ததும்பியது. அவன் அந்தணர் நின்ற இடத்துத் தூசியில் சிறிதெடுத்துத் தலையில் தூவிக் கொண்டான். அவனது வாய் முணுமுணுத்தது: "சடங்கு வழி பக்தியை விட பாச வழி பக்தியே பரமானந்தத்தில் எளிதில் சேர்க்கும். இவரே என்னை விட கிருஷ்ணனுக்கு நெருக்கமானவர்."



# சிங்கம் வாழ் குன்று

இரா. இரகுநாதன்

*செயல் அலுவலர், அருள்மிகு மகாலட்சுமி திருக்கோயில், பெசன்ட் நகர், சென்னை-90.*

**செ**ன்னையிலிருந்து செங்கல்பட்டு செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்து உள்ளது சிங்கப்பெருமாள் கோவில் என்று அழைக்கப்படும் நகர்ப்புறம். சென்னை யிலிருந்து 48 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

சிறந்த புராண வரலாறு கொண்ட திருக்கோயில். குன்றைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ள குடைவரைக் கோயில். இங்கு இருக்கும் மூலவர் 3வது கண்ணுடன் காட்சி தருகிறார். குன்றே மூலவரின் ஸ்தூல சரீரமாய் உள்ளதால், மூலவரைப் பிரதட்சணம் செய்ய வேண்டுமென்றால் குன்றையே சுற்றி வர வேண்டும்.

பார்ப்பதற்கு, ரசிப்பதற்கு, அனுப விப்பதற்கு அருள் பெறுவதற்கு என பல விதங்களிலும் சிறப்பு மிக்கதாக அமைந்த திருக்கோயில் சிங்கப் பெருமாள் கோயில் அருள்மிகு பாடலாத்ரி நரசிம்மப் பெருமாள் திருக்கோயில்.

பிரம்மாண்ட புராணத்தில் இத்திருக் கோயில் பற்றிய குறிப்பு காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

நரசிம்மவதாரக் காலத்தில் இத்திருக்கோயிலைச் சுற்றி பெரிய அடர்ந்த வனம் இருந்தது எனவும், அக்காட்டில் ஜாபாலி என்னும் மகரிஷி தவம் செய்து கொண்டிருந்ததாகவும் அவரது வேண்டுகோள்படி திருமால் இரணியனை வதம் செய்து குருதிக் கறையைக் கழுவிய கோலத்தில் கோபம் தணியாமல் உக்ர நரசிம்மராகக் காட்சி தந்ததாகவும் கூறப்படுகிறது.

அதனால் இங்கு இருக்கும் நரசிம்மர், குகைக்குள் அமர்ந்த கோலத்தில் வீராசனத்தில், அபயம் மற்றும் வரதத் திருக்கரங்களுடன் மூன்று கண்களுடன், யாரும் சாந்தம் செய்யாத, இரணியனை அழித்துக் குகையில் வந்து அமர்ந்த கோலத்தில் இருப்பதனால் ஏகமூர்த்தியாக, நான்கு கரங்களுடன் அபயம் அளித்து காக்கும் கோலத்தில் காட்சி தருகிறார்.

சுமார் எட்டடி உயரமும் மூன்றரை அடி அகலமும் கொண்ட சுயம்புத் திருமேனி அலங்காரங்களுடன் விளங்குகிறது. பிரகலாதனுக்குப் பயம் நீங்க எவ்வாறு காட்சி தந்தாரோ அவ்வாறு தனக்கு காட்சி

கொடுக்க ஜாபாலி மகரிஷி வேண்டியதாகவும், அதனால் சன்னதியின் மூலவர் முன்பே பாலகனாகத் திருமேனியுடன் பாலநரசிம்மராகக் காட்சி தரும் திருத்தலமாக அமைந்துள்ளது.



நரசிம்மர் குகை அமைந்துள்ள குன்று பாடலாத்ரி என வழங்கப்படுகிறது. பாடலம் என்றால் சிவப்பு என்பது பொருள். அத்ரி என்றால் கல்மலை என்பது பொருள்.

கடினமான கருங்குகையில், கோபம் தெரிக்கும் கண்களுடன் சிவந்த மேனியுடன் இறைவன் அமர்ந்ததால், பாடல + அத்ரி பாடலாத்ரி நரசிம்மர் எனப் பெயர் பெற்றதாக அறியமுடிகிறது.

மலையே நரசிம்மராக உருவெடுத்ததால் இத்திருக்கோயில், அகோபிலம் என அழைக்கப்படும் திவ்விய தேசத்தின் திருமங்கை ஆழ்வாரின் பெரிய திருமொழியில் ஏழாவது திருமொழியில் முதல் பத்தாக "அங்கண்மாஞாலம் அஞ்ச" என்னும் 10 பாடல்களும் தினமும் சாற்று முறை செய்யப்படுகிறது.

இவ்வாறு சாற்றுமுறை செய்யப்படுவதால் இத்திருக்கோயில் புதிதாக உருவானதாகக் கருதப்படக்கூடாது.

இத்திருக்கோயில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள பல்லவர்கால பல குடைவரைக் கோயில்கள் கட்டுமான அமைப்புடன் ஒத்துச் செல்வதால் இதுவும் அக்காலத்தைச் சார்ந்தது.

ஏனெனில், இத்திருக்கோயில் மூலவரின் முன்புறம் உள்ள குடைவரைக் கோயில் தூணில் சோழர் காலத்திய கல்வெட்டு, திருக்கோயிலுக்கு நன்கொடை கொடுத்ததைப் பற்றிக் குறிப்பிடுவதால், அதற்கு முந்தைய காலத்து குடைவரைக் கோயிலாக இது இருந்திருக்கிறது. பல்லவ மன்னர்கள் நரசிம்மர் என்ற பட்டப் பெயர் சூட்டிக் கொள்வதும், திருமாலுடன் நெருங்கிய தொடர்புடைய பெயர்களைச் சூட்டிக் கொள்வதும், பல்லவர் காலத்தில் குடையப்பட்ட இத்திருக்கோயில் பின்னர் சோழர் காலத்தில் நன்கொடை அளித்துக் கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளதாகவே கருத வேண்டியுள்ளது.

அகோபிலத்தின் பாடல்கள் இங்கு சாற்றுமுறை செய்யப்படுவதாலும், அபிமானத் தலங்களில் ஒன்றாகவும், பிரார்த்தனைத் தலமாகவும் இது அமைந்துள்ளதால், இதனை அகோபிலத்துக்கு நிகரான தலமாகக் கருதப்படுகிறது.

அதன் பின்னர், குன்றில் மூலவருக்கு வலது புறத்தில் தாயார் சந்நிதி கட்டப்பட்டு, அகோபில வல்லித் தாயார் எனவும், இடதுபுறம் ஆண்டாளுக்குச் சந்நிதி நிறுவப்பட்டுள்ளது. சிறியதாக இலட்சுமி நரசிம்மரும், பிற்காலத்தில் அமைக்கப்பட்டு வழிபாட்டில் உள்ளது.

திருக்கோயிலின் தல விருட்சமாக பாரிஜாதம் என அழைக்கப்படும்



பவளமல்லியும், இறைவன் குருதிக்கறை போக கை கழுவி தனது உடலைச் சுத்தப்படுத்தியதால், தீர்த்தம் சுத்த புஷ்கரணி எனவும் வழங்கப்படுகிறது.



உற்சவருக்கு பிரகலாதவரதன் எனவும், ஸ்ரீதேவி பூதேவியோடு எழுந்தருளியுள்ளார். இத்திருக்கோயிலில் வைகாசி மாதம் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. இதைத் தவிர சித்திரை வருடப் பிறப்பு, சித்ரா பவுர்ணமி, நரசிம்ம ஜெயந்தி, இராமானுஜ ஜெயந்தி, பெரியாழ்வார் ஜெயந்தி, ஆனி கருடசேவை, திருவாடிப்பூரம், ஆடி மாதத்தில் கஜேந்திர மோட்ச கருட சேவை, பவித்ரோற்சவம், ஸ்ரீ ஜெயந்தி, தீபாவளி, திருக்கார்த்திகை போன்ற பண்டிகைகளுக்குக் குறைவில்லாத வகையில் உள், வெளிப் புறப்பாடுகளும் நடந்து வரும் திருக்கோயில்.

நுழைவு வாயிலின் எதிரில் உள்ள கதவு எப்போதும் பூட்டியே இருக்கும். வைகுண்ட ஏகாதசி அன்று மட்டுமே சொர்க்கவாசல் திறக்கப்பட்டு தரிசனம் நடைபெறும். சொர்க்கவாசல் மண்டபத்தில் ஒருபுறத்தில் நரசிம்மர் அமர்ந்த திருக்கோலத்திலும் எதிரில் அவரை வணங்கும் நிலையில், ஜாபாலி மகரிஷியும் காட்சி தரும் திருக்கோயிலாகும். பிரதான வாயிலின் எதிர்ப்புறம் தெருவின் கோடியில் சிறிய திருவடி சந்நிதியும், சிறிய திருவடியின் வலப்புறம் சாலையையொட்டி சுத்த புஷ்கரணியும் அமைந்துள்ளது.

ஆழ்வார்கள் சென்று வணங்கியவைகள் மற்றும் பாசுரம் பாடியவைகள் திவ்விய தேசங்கள் என்றழைக்கப் படுகின்றன. ஆனால், அக்காலத்திலேயே இருந்து ஆழ்வார்களால் பாடப்படாத திருக்கோயில்களில் ஒன்றாக சிங்கப்பெருமாள் கோயில் அமைந்திருக்கிறது. எந்தவிதமான சிறப்புகளும் குறையாத ஒரு திருக்கோயில் சிங்கப் பெருமாள் கோயில்.



# ஆகார நியமம்



**தென்னம்பட்டு ஏகாம்பரம்**

**பெ**றுதற்கரிய மானிடப் பிறவியில் பிறந்தோம். மிருகங்களைப் போல உண்டு, உறங்கி, குழந்தை குட்டிகளைப் பெறுவதற்காகவா பிறந்தோம்? இல்லை. இந்த மனித தேகத்தில்தான் இறைவன் சிறப்பாகப் பிரகாசிக்கிறான். மானிட தேகமே இறைவன் உறையும் திருக்கோயிலாகும். இறைவனை நம்முள்ளே கண்டறியவே இப்பிறவி பெற்றோம். ஆகவே ஆன்மிக வாழ்விற்காக தேகத்தைப் போற்றிக் காப்பது அவசியமாகிறது.

'முக்தி அடைவதற்கு இம்மானிட தேகமே தக்கது ஆதலின், வேறு தேகத்தால் அடைவது அரிதாதலின், எவ்விதத்திலாயினும் அதனைப் பாதுகாத்தல் வேண்டும்,' என வள்ளற் பெருமானார் கூறுகிறார்.

**'உடம்புளே உத்தமன் கோயில்**
**கொண்டான் என்று**
**உடம்பினை யானிருந்து ஓம்புகின்**
**றேனே'** என்றும்,
**'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**திறம்பட மெய்ஞ்ஞானம் சேரவு**
**மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே'**

—என்றும் திருமூலர் பெருமான் உடம்பை ஓம்புவதின் அவசியத்தை வலியுறுத்துகிறார்.

'சரீர மாத்யம் கலு தர்ம சாதனம்' என்று சாத்திரங்கள் கூறுகின்றன. சரீரம் தர்ம சாதனம். உடலைப் பட்டினி போடுவது, அளவுக்கு மீறி உழைப்பது என உடலைத் தண்டிக்கவோ, துன்பம் துக்கம் வரவழைத்துக் கொள்ளவோ கூடாது. ஆன்மிக சாதனைகளுக்குத் தேக ஆரோக்கியம் முக்கியமானது.

உண்ணும் உணவைப் பொறுத்தே தேக ஆரோக்கியம் அமைகிறது. துன்பங்களில் எல்லாம் மிகப் பெரிய துன்பம், ஆரோக்கியத்தை இழந்து விடுவதே ஆகும்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதை இளமையில் உணர்ந்து, ஆரோக்கிய வாழ்வைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

நாம் உண்ணும் உணவே இரத்தமாகவும், தசையாகவும் ஆகிறது, உண்ணும் உணவின் சூக்குமமே மனதாகவும் ஆகிறது. மனம் அன்னமயமானது என்கின்றனர் நம் ஞானியர்.

உணவு என்பது உடம்பை மட்டுமன்று; உள்ளத்தையும் உருவாக்குகிறது. உண்ட உணவின் சாரமே, இந்த உடம்பாக இருக்கிறது.

எனவே உணவு குறித்தும், உண்பது குறித்தும் உள்ள நியதிகளை அறிவது அவசியமாகிறது.

**'ஆகார சுத்தெள ஸத்வ சுத்தி'**

—சாந்தோக்கிய உபநிஷதம்.

'தூய்மையான உணவாலே மனிதனிடம் உள்ள குணம் மேன்மையடைகிறது' என்கிறது உபநிடதம்.

உணவு தூய்மையுடன் இருந்தால்தான், ஒருவனிடம் சத்துவ குணம் மேலோங்கும்; நினைவாற்றல் பெருகும்; மனமும் சுத்தமாகும்.

மனிதனிடத்தில் ஆன்மிக வளர்ச்சி உண்டாவதற்கும், உண்ணும் உணவிற்கும் நெருங்கிய தொடர்புண்டு.

உணவின் மூலமாக, உடல் பெறும் சத்துகளினால் நமது மனத்தின் தன்மையும் நிர்ணயிக்கப்படுகிறது. நாம் உண்ணும் உணவிற்கேற்ப நம் எண்ணங்களும் அமைகின்றன.

காய், கனி, கிழங்கு, கீரை, பருப்பு என இயற்கை தரும் சத்தான உணவுப் பொருட்களைச் சேர்த்துக் கொள்வது நல்லது.

உண்ணும் உணவில் அதைச் சமைப்பவர், சமைக்கப்படும் விதம், அதை ஏற்கும் பாத்திரங்கள்,

பரிமாறுபவர் இவையெல்லாம் கூட முக்கியமானவை.

தண்ணீரைச் செம்புப் பாத்திரத்தில் வைத்தல், நீரின் சத்துவ குணம் அதிகரிக்கிறது.

உணவைப் பரிமாறும் மனிதனின் பண்பைப் பொறுத்தும் உணவின் தன்மை மாறுகிறது.

பெரியோர் ஒருவர் உணவைத் தொடும்போது, அதில் அமைதியான ஆவி அலைகள் கலந்து, உணவை அமுதமாக, பிரசாதமாக ஆக்கி விடுகிறது.

எனவே, ஆன்மிக வாழ்வில் ஈடுபாடுள்ளோர், கூடுமானவரை உணவு விடுதிகளில் உண்பதைத் தவிர்த்து, வீட்டிலேயே உணவு ஏற்கும் பழக்கம் மேற்கொள்ள வேண்டும்.

உண்ணும் உணவை முதலில் தெய்வத்திற்கு நிவேதனம் செய்து, அவ்வுணவைப் பிரசாதமாகக் கருதி உண்ணுங்கள். உண்ணும்போது உணர்ச்சிவசப்படாமல், பதட்டப்படாமல், அமைதியாக, பேசாமல் உணவே நினைவாக உண்ணுங்கள்.

இறைச்சியையும், உணர்ச்சி ஊட்டக்கூடிய உணவுகளையும் தவிர்க்க வேண்டும்.

நாள்பட்ட உணவு, ஊசிப்போன உணவு, அழுகிப் போன காய்கறி, உணவுப் பண்டங்கள் முதலியவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.

முட்டை, மீன், புலால் முதலான கொழுப்புச் சத்துள்ள உணவுகளை இளம் பருவத்திலேயே அறவே ஒதுக்க வேண்டும். இவ்வாறான உணவுப் பழக்கத்தை மேற்கொண்டால் வாழ்நாள் வரை ஆரோக்கியமாக வாழலாம்.

பொதுவாக கொழுப்பு, எண்ணெய் நிறைந்த உணவுப் பண்டங்களைச் சாப்பிடக் கூடாது. புதிய காய்கறிகள், கனிகள், கிழங்குகள், கீரைகள், பழங்கள் நல்லது.

நாம் செய்யும் வேலைகளுக்கேற்ப சத்தான உணவை உண்ணலாம். ஆனால், உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் உணவுவகைகளை ஒரு போதும் ஏற்கக்கூடாது.

'சைவ உணவைப் போன்று உடலுக்கு வலிமையும், ஆரோக்கியமும் தருவது வேறு எதிலுமில்லை' என்றார் பெர்னாட்ஷா. தன் தோட்டத்தில் பயிரிட்டு உண்ட சைவ உணவுக்காரர் அவர்.

சைவ உணவே ஆயுள், அறிவு, வலிமை, உடல் நலம் இவற்றை மேம்படுத்துவதாக இருக்கிறது.

இனிப்பு, காரம், புளிப்பு முதலியவைகளை அளவுக்கு மிஞ்சி உண்பது நல்லதல்ல, உளுத்தம் பருப்பு அப்படியே. இதனால் சோம்பல் உண்டாகிறது. ஆன்மிக வாழ்க்கையின் முன்னேற்றம் தடைப்படுகிறது.

உப்பு, காரம், புலால் உணவு உண்பவன் தேகம் நாறும். உடம்பில் பதட்டம் உண்டாகும். மனக் கட்டுப்பாடும் சாத்தியமாகாது. தூக்கத்தையும், சோம்பலையும் உண்டு பண்ணும்.

சாதகனுக்கு மாமிச உணவு அறவே ஆகாது. மாமிச உணவு தேகத்தையும், மனத்தையும் அசுத்தமாக்கி விடுகிறது.

தயிரும், கீரையும் அதிகம் சாப்பிட வேண்டியவை. ஆனால், இரவில் சாப்பிடவே கூடாது.

நெய், பால் என்று கொழுப்பை ஏற்றுகின்ற உணவைக் குறைக்க வேண்டும்.

சிரார்த்தம் முதலிய சடங்குகளிலுள்ள உணவை உண்ணக் கூடாது. அது சாதகனுக்கு தீங்கு விளைவிக்கும்.

**'மூலஞ்சேர் கறிநுகரோம்;**
**மூத்தயிர் உண்போம்**
**முதநாளில் சமைத்தகறி**
**அமுதெனினும் அருந்தோம்**
**ஞாலந்தான் வந்திடினும்**
**பசித்தொழிய உண்ணோம்**
**நமனார்க்கிங் கேதுகவை**
**நாமிருக்கும்இடத்தே'**

**'மண்பரவு கிழங்குகளில்**
**கருணையன்றிப் புசியோம்**
**வாழையிளம் பிஞ்சொழிய**
**காயருந்தல் செய்யோம்**
**நண்புபெற உண்டபின்பு**
**குறுநடையும் பயில்வோம்**
**நமனார்க்கிங் கேதுகவை**
**நாமிருக்கும் இடத்தே'**

**–தேரையார்.**

என்றெல்லாம், நம் முன்னோர் உணவு குறித்து சிந்தித்துள்ளனர்.

அரிசி, பருப்பு, கறிகாய் என சைவ உணவாக இருந்தாலும், பசிக்காக அரை வயிறாகச் சாப்பிட வேண்டுமேயன்றி, ருசிக்காகவும், உடலில் பலம் ஏற்றுவதற்காகவும் வயிறு திணறும் படியாக உண்ணக் கூடாது.

தனித்து, விழித்தும் இருக்க வேண்டுமெனில் உணவிலும், எச்சரிக்கையும், விழிப்புணர்வும் இருக்க வேண்டும்.

'எரிகிறதைப் பிடுங்கினால்தான் கொதிக்கிறது நிற்கும்' என்ற முதுமொழிக்கேற்ப உணவில் கட்டுப்பாடு வருமானால் தூக்கமும் குறையும்; போகமும் குறையும். அப்போது விழித்திருக்கவும், தனித்திருக்கவும் சாத்தியமாகும். துயில, பயில,

எழுத மாத்திரமே தனித்திருக்க வேண்டும்.

கிடைத்த போதெல்லாம் உண்பது, அளவு கடந்து உண்பது, புகை பிடிப்பது, மது அருந்துதல் போன்றவையெல்லாம் உடல் நலத்தைக் கெடுத்து, உயிரையும் அழிக்கும்.

'நாவை அடக்கிப் பேசுவது ஆன்மாவுக்கும் நல்லதாயிருப்பது போல, அளவாக உணவு கொள்ளுதல் உடலுக்கு நல்லது' என்கிறது பார்சிய சமய வேதம்.

எப்பொழுதும் வயிறு முட்ட சாப்பிடக் கூடாது. போதிய அளவு உணவு கொண்டவுடனேயே, பொதுவாக உடல் ஒரு சைகை காட்டும். அதுதான் ஏப்பம், ஏப்பம் வந்தவுடன் உண்பதை உடனே நிறுத்த வேண்டும்.

வயிறு திணற உண்டால், விழித்திருக்கும் போதே நினைவு தப்பும். கண்கள் மயங்க, உறக்கம் வரும். உடம்பில் வியாதி மட்டுமல்ல; இயல்பாகவே தமோகுணம் சேர்ந்துவிடும்.

வயிற்றிற்கு அரைப்பங்கு உணவும், கால் பங்கு நீரும் உட்கொண்டு, மற்றோர் கால்பங்கு காற்று உலவும்படி விட வேண்டும். உண்ட உணவு எளிதில் ஜீரணமாகும்படி குறைத்துண்ண வேண்டும்.

பகலில் மட்டும் போஜனம், இரவில் சிற்றுண்டி என உணவுப் பழக்கத்தை வைத்துக் கொள்வது நலம். பகலில் சாப்பிடும் அளவைக் காட்டிலும், இரவில் மிகக் குறைவாகவே இருத்தல் வேண்டும். ஆரம்பத்தில் சிறிது பலவீனம் தோன்றலாம். சில நாள்களில் சரியாகி, உடம்பு அதிக சுறுசுறுப்பாகவும், மிகவும் நல்ல நிலையிலும் இருக்கும். உடம்பில் அயர்வு தோன்றாது. அறிவில் தெளிவிருக்கும். மனத்தில் குன்றாத இளமை பூத்து நிற்கும்.

எனவேதான் 'அளவறிந்து உண்', 'மீதூண் விரும்பேல்' என்றனர் நம் பெரியோர்.

அந்தி நேரம், நள்ளிரவு நேரங்களில் உண்பது கூடாது. இரவில் ஏதும் உண்ணாமல் உறங்கினால் உடல் தளர்ச்சி அடையும்.

இரவில் குறைவாக உட்கொண்டால் உடல் இலேசாக இருக்கும். மனத்தை எளிதில் ஒருமுகப்படுத்தலாம். விழிப்பு நிலையில் உடம்பு சுறுசுறுப்பாய் இருக்கும். பகலில், மனத்தை ஈர்க்கும் காரியங்கள் பல; அதனால் பகலில் தியானம் செய்வது எளிதன்று. ஆனால், இரவிலோ எல்லா உயிர்களும் உறங்கி விடுகின்றன. இயற்கையாகவே, அமைதி நிலவுகிறது. மனம் எளிதில் ஒருமுகப்படுகிறது. பிரார்த்தனை சித்தமிசை குடிகொள்கிறது.

வயிற்றை நிரப்பிக் கொண்டு பிரார்த்தனை செய்வதென்பது முடியாத ஒன்று. ஏனென்றால் உண்ட உணவைச் செரிப்பதிலேயே சக்தியின் பெரும் பகுதி செலவாகும். மனமோ, அமைதியற்று அலைபாய்ந்து கொண்டிருக்கும். அதனால் தான் உணவிலும், தூக்கத்திலும் மற்று எல்லாப் பழக்கங்களிலும் சமநிலை வேண்டுமென்று பகவத் கீதை வலியுறுத்துகிறது.

'மிகுதியாக உண்பவனுக்கும், மிகக் குறைவாக உண்பவனுக்கும், அதிகமாகத் தூங்குபவனுக்கும், மிகக் குறைவாகத் தூங்குபவனுக்கும் யோகம் என்பது இல்லை' என்கிறது பகவத் கீதை.

'உணவு செரிமான பின்பே அடுத்த வேளை உணவை அளவறிந்து உண்பவனுக்கு உடல் நலம் குறித்து மருந்தொன்றும் தேவையில்லை; உடம்பும் நீண்டநாள் நீடித்திருந்து உயிர்வாழ்வான்' என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

**'மருந்தென வேண்டாவாம்**
**யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்'**

**'அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு**
**பெற்றான் நெடிது உய்க்கு மாறு'**

சாத்விகமான உணவை அரை வயிறு உண்டு வந்தால், நல்ல நித்திரையில் ஓய்வு பெறலாம். சிறு அரவம் கேட்டாலும் விழிப்பு நிலை ஏற்படும்.

புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் வழக்கத்தைவிட சற்றுக் குறைவாகவே உண்பது நல்லது. அம்மாதங்கள் 'யமனின் பற்க'ளென நம் சாத்திரங்கள் கூறுகின்றன.

குறைவாகவே உண்பதென்பது மெய்யான வணக்கமாகும்.

இதுவரை உண்பது குறித்துப் பார்த்தோம். பசித்திருத்தல் குறித்து இனிக் காண்போம்.

மனம் ஒருமைப்படுவதற்கு உண்ணா நோன் பெனும் உபவாசமும் ஓர் உயர்ந்த சாதனையாகும்.

மாதத்தில் ஆரம்பத்தில் ஓரிரு தினங்களில் ஒரு வேளை உண்ணவும், பின்னர் அந்நாளில் இரண்டு வேளை உண்ணாமலும், பழகிய பின்னர் முழுக்க ஒருநாள் உணவு கொள்ளா மலும் இருப்பது உடல் நலத்திற்கு நல்லது.

நோன்பு மூலம் பலவீனம் ஏற்படுகிறது என்பது தவறு. அதற்குப் பதிலாக அதிக பலமும், சக்தியும் பிறக்கின்றன. கொடிய வியாதிகளுக்கெல்லாம் பட்டினியே பரிகாரம். ஆம், 'லங்கணம் பரம ஔடதம்.'

பட்டினி இருப்பது உடலுக்கும், உள்ளத்துக்கும் நல்லது. ஆசை தணிகிறது. எந்தக் காரியத்தையும்

சாதிக்கக் கூடிய அசையா உறுதியும், தளரா ஊக்கமும் கிட்டுகிறது.

பசித்திருப்பதால் பார்வையில் கூர்மையும், கேள்வியில் தீட்சண்யமும், நுகர்ச்சியில் நலனும் அதிகரிக்கின்றன.

'எவனொருவன் நோன்பு மேற்கொண்டு தன்னைப் பசித்திருக்க வைப்பானோ அவனுடைய மனம் நுண்ணறிவு உடையதாகவும், அவனுடைய எண்ணம் மாண்புடையதாகவும் இருக்கும்' என இறைதூதர் நபிகள் நாயகம் கூறுகிறார்.

இறுதியாக 'பசித்திரு, தனித்திரு, விழித்திரு' என்றருளிய வடலூர் வள்ளற் பெருமானார் உணவு குறித்து அருளியவற்றைத் தொகுத்துக் காண்போம்.

**'சோற்றிலே விருப்பம் சூழ்ந்திடில் ஒருவன்**
**துன்னுநல் தவம் எலாம் சுருங்கி**
**ஆற்றிலே கரைத்த புளிஎனப் போம்.'**

'பசி கண்டவுடன் தடை செய்யாமல் ஆகாரம் கொடுத்தல் வேண்டும். ஆகாரம் கொடுக்கும் போது மிகுந்த ஆலயசிமுமாகாது; மிகுந்த தீவிரமுமாகாது.

போஜனஞ் செய்த பின்னர் நல்ல நீர் குடித்தல் வேண்டும். அந்த நல்ல நீரும் வெந்நீராதல் வேண்டும். அதுவும் அதிகமாகக் குடியாதிருத்தல் வேண்டுதல்.

கிழங்கு வகைகளில் கருணைக் கிழங்கு மாத்திரம் கொள்ளுதல் கூடும். பழ வகைகளில் பேயன் வாழைப் பழம், ரஸ்தாளி வாழைப்பழம் இவை நேர்ந்தால் சிறிது கொள்ளுதல் கூடும். பழைய கறிகாய்களைக் கொள்ளா திருத்தல் வேண்டும்.பதார்த்தங்களில் புளி, மிளகாய் சிறிதே சேர்க்க வேண்டும். மிளகு, சீரகம் அதிகமாக சேர்த்தல் வேண்டும். கடுகு சேர்ப்பது அவசியமல்ல. உப்பு குறைவாகவே சேர்த்துக் கொள்ள வேண்டுமே அன்றி, எந்த வகையிலும் உப்பு மிகுதியாகக் கொள்ளாமல் உபாயமாகவே கொள்ளுவது தேகம் நீடிப்பதற்கு ஏதுவாம்.

முருங்கை, கத்திரி, தூதுளை, பேயன் வாழைக்காய் இவைகளை அடுத்தடுத்துக் கறி செய்து கொள்ளலாம்.

புளியாரைத் துவையல் தினந்தோறும் கிடைக்கினும் மிகவும் நன்று. கரிசலாங் கண்ணிக்கீரை, தூதுளைக்கீரை, முன்னைக்கீரை, பசலைக் கீரை, முருங்கைக்கீரை இவைகளைப் பருப்போடு சேர்த்தும், மிளகோடு சேர்த்தும், புளியிட்டும், தனித்தும் கறி செய்து கொள்ளக்கூடும்.

எந்தப் போஜனத்திலும் புலால் எந்த வகையிலும் புசிக்கப்படாது.

எப்படிப்பட்ட போஜனமாயினும் சிறிது குறையவே புசித்தல் வேண்டும். எந்தக் காலத்திலும் பசித்தால் அல்லது எந்த வகையிலும் போஜனம் செய்யப்படாது.

இராப் போஜனம், பகற் போஜனத்தைப் பார்க்கினும் அற்பமாகப் புசித்தல் வேண்டும்.

இரவில் தயிர், கீரை, வாயுவான பதார்த்தம், குளிர்ச்சியான பதார்த்தம் சேர்க்கப்படாது.

சூடான பதார்த்தங்களையே அறிந்து சேர்க்க வேண்டும். அவை சிறு கத்திரி, முருங்கை, அவரை, வற்றல் முதலியவையாம்.

ஆகாரம் அரை; நித்திரை அரைக்கால்; மைதுனம் வீசம்; பயம் பூச்சியம் ஆகப் பெறுதல்.

கரிசாலையும், தூதுளையும்; – கரிசாலையை – தினே தினே – பச்சையாகவாவது, சமையல் செய்தல் முதலிய வகையாலாவது. சாப்பிட்டு வர வேண்டும். பிரதம உள்ளுடம்பாகியதை நீடிக்கப் பண்ணும். மேற்குறித்த மூலிகையை அலட்சியம் செய்யாது தினம் தினம் உட்கொண்டால் தேகக் கெடுதியாகிய அசக்தம் நீங்கி, தேகம் வலிவுள்ளதாய் நெடு நாளைக்கு இருக்கும்.

அறிவை விளக்குவதற்கும், கவன சத்தி உண்டு பண்ணுவதற்கும், கரணம் ஓய்வதற்கும், கபத்தை அரிப்பதற்கும் யோக்கியதையுடைய ஔஷதி தூதுளை.

சுத்த சன்மார்க்க சாத்தியர்கள், நெய் முதலிய வஸ்துகள் கொள்ளப்படாது.

தாம் தம்முடைய தேகத்தை ஜாக்கிரதையாக உபசரித்து வர வேண்டும். ஜாக்கிரதை என்பது அருந்துதல், பொருந்தல்களில் மித போஜனம், மித போகம். மித போஜனமாவது, கோபம், விராகம், அலட்சியம், முயற்சி, விரைவு இவை முதலிய ஏதுக்களால் குறைத்தல், விருந்து, சுவை, விருப்பு முதலிய ஏதுக்களால் ஏற்றல் இல்லாமல் சமமாகப் புசித்தலாம்.

தியான மயமானால் பொசிப்பு மாறும்."

இவ்வாறாக இத்தலைப்பில் கூறப்பெற்ற கருத்துக்களை எல்லாம் ஒருவன் முழுக்கக் கடைப்பிடித்தால் குறைவற்ற செல்வமாகிய நோயற்ற வாழ்வும், நல்லுடலும் கிடைக்கும். இதில் ஐயமே இல்லை.

ஆனால், நோயற்ற இந்நல்லுடல் எதற்கு எதற்கு என்ற வினா, நம் உள்ளத்தில் உறுத்திக் கொண்டே இருக்க வேண்டும். திடம்பட மெய்ஞ்ஞானம் சேர்வதற்கே இந்நல்லுடலும் பிணியிலா வாழ்வும் என்ற எண்ணமிருக்க வேண்டும். இக்கடத்தைக் கொண்டே இக்கடத்துள் ளிருக்கும் அக்கடத்தைப் பெற வேண்டி இருக்கிறது. பெறா விட்டால் யாது பயன்?





1959ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 22/1959) அடிப்படை மாறாமல் தேவையான சட்டத் திருத்தங்களைச் செய்து தற்போதைய நடைமுறைக்கு ஏற்றப்படி தொகுத்து, ஒருங்கிணைத்து தமிழ்நாடு இந்து சமயம் மற்றும் அறநிலையக் கொடைகள் சட்டம் ஏற்படுத்த உரிய பரிந்துரைகள் அளிக்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. பி.பாஸ்கரன் அவர்கள் தலைமையில் அமைக்கப் பெற்ற முதல்நிலை குழுவின் கூட்டம் 08.10.2010 அன்று ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கலந்தாய்வுக் கூட்டத்தில் குழுவின் தலைவர் மாண்புமிகு நீதியரசர் திரு. பி.பாஸ்கரன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரியகருப்பன், குழுவின் உறுப்பினர் குன்றக்குடி ஆதீனத் தலைவர் தவத்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல அடிகளார், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலர் திரு.ரா.சிவகுமார், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு.ப.ரா.சம்பத், இ.ஆ.ப., குழுவின் உறுப்பினர் - செயலர் / இணை ஆணையர் (தலைமையிடம்) திருமதி ந.திருமகள், உறுப்பினர், ஓய்வு பெற்ற இணை ஆணையர் திரு.ந.ச.இராமச்சந்திரன் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் மற்றும் ஸ்ரீ மணவாள மாமுனிகள் கைங்கர்ய சபை சார்பில் 05.10.2010 அன்று நடைபெற்ற விழாவில் 1953ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற திருக்கோயிலின் தலப்புராண நூலின் மறு பதிப்பு வெளியிடப்பெற்றது. இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.ப.ரா.சம்பத்.இ.ஆ.ப. அவர்கள் நூலினை வெளியிட சுற்றுலா மற்றும் பண்பாட்டு துறை அரசுச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு இ.ஆ.ப. அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். இந்தியத் தொல்லியல்துறை ஓய்வு பெற்ற அதிகாரி கே.வி.ராமன், சபை நிர்வாகி பக்திசாரன், சபை செயலாளர் கே.வி.சீனுவாசன், சென்னை மண்டல அறநிலையத் துறை இணை ஆணையர் பி.வாசுநாதன், திருக்கோயில் துணை ஆணையர் - செயல் அலுவலர் திரு.பொ. ஜெயராமன் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர்.

பதிவுஎண்: TN/CH(C)/305/09-11/WPP NO. 451/09-11

உ
அருள்மிகு அண்ணாமலையார் துணை

அண்ணமலை எம் அண்ணா போற்றி!
கண்ணார் அமுதக் கடலே போற்றி!!

தென்னாடுடைய சிவனே போற்றி!
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி போற்றி!!

## அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை

# திருக்கார்த்திகை பிரம்மோற்சவ விவரம்

(1420 ஆம் பசலி - 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம்)



ஐப்பசி மற்றும் கார்த்திகைத் திங்கள்
திருவள்ளுவராண்டு 2041

| எண். ஆங்கில தேதி | தமிழ் வருடம் மாதம் | தேதி நாள் | விழா விவரம் | உற்சவம் - வாகனங்கள் விவரம் |
|---|---|---|---|---|
| 1. 09.11.2010 | ஐப்பசி | 23 செவ்வாய் | | அருள்மிகு துர்க்கை அம்மன் உற்சவம் |
| 2. 10.11.2010 | | 24 புதன் | | அருள்மிகு பிடாரி அம்மன் உற்சவம் |
| 3. 11.11.2010 | | 25 வியாழன் | | அருள்மிகு விநாயகர் உற்சவம். |
| 4. 12.11.2010 | | 26 வெள்ளி | 1 | துவஜாரோகணம். (காலை 4.35 மணிக்கு மேல் 6.05 மணிக்குள்) |
| 5. 13.11.2010 | | 27 சனி | 2 | வெள்ளி இந்திர விமானம் |
| 6. 14.11.2010 | | 28 ஞாயிறு | 3 | சிம்ம வாகனம், வெள்ளி அன்ன வாகனம் |
| 7. 15.11.2010 | | 29 திங்கள் | 4 | வெள்ளி கற்பக விருக்ஷம், காமதேனு வாகனம். |
| 8. 16.11.2010 | | 30 செவ்வாய் | 5 | வெள்ளி ரிஷப வாகனம். |
| 9. 17.11.2010 | கார்த்திகை | 1 புதன் | 6 | வெள்ளி ரதம். |
| 10.18.11.2010 | | 2 வியாழன் | 7 | மகாரதம் (காலை 7.30 மணிக்கு மேல் 8.35 மணிக்குள் வடம் பிடித்தல்) |
| 11.19.11.2010 | | 3 வெள்ளி | 8 | மாலை 4.00 மணிக்கு ஸ்ரீ பிக்ஷாண்டவர் உற்சவம், இரவு குதிரை வாகனம். |
| 12. 20.11.2010 | | 4 சனி | 9 | கைலாச வாகனம், காமதேனு வாகனம். |
| 13. 21.11.2010 | | 5 ஞாயிறு | 10 | காலை 4.00 மணிக்கு பரணி தீபம் மாலை 6.00 மணிக்கு மகா தீபம். |
| 14. 22.11.2010 | | 6 திங்கள் | | இரவு அருள்மிகு சந்திரசேகர் தெப்பல் உற்சவம், அருள்மிகு பெரிய நாயகர் கிரிபிரதக்ஷணம். |
| 15. 23.11.2010 | | 7 செவ்வாய் | | இரவு அருள்மிகு பராசக்தி அம்மன் தெப்பல் உற்சவம். |
| 16. 24.11.2010 | | 8 புதன் | | இரவு அருள்மிகு சுப்பிரமணியர் தெப்பல் உற்சவம். |
| 17. 25.11.2010 | | 9 வியாழன் | | அருள்மிகு சண்டிகேசுவரர் உற்சவம். |

**வ.தனுசு** எம்.எஸ்ஸி.,
அறங்காவலர் குழுத் தலைவர்.

**ப.தனபால்** எம்.ஏ.,பி.எல்.,
இணை ஆணையர்/ செயல் அலுவலர்

பெ.கோவிந்தன், க.மணிவர்மா, மு.ச.ம.உ. திருமதி. அ.பானுமதி அருணகிரி. இர.சீனிவாசன்.
அறங்காவலர்கள்